விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

# தமிழ் விவசாயிகளுக்கு சிங்களவர் அச்சுறுத்தல்

## ஆயுதங்களுடன் திரண்டதனால் மூதூரில் நேற்று பதற்றம்

(மூதூர்)

திருகோணமலை மூதூர் பகுதியில் காணிப் பிரச்சினை ஒன்றின் முரண்பாட்டின் காரணமாக நேற்றையதினம் கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களுடன் விகாராதிபதி ஒருவர் தலைமையில் சென்ற சிங்கள விவசாயிகள் பலர் தமிழ் விவசாயிகளை ஆயுத முனையில் அச்சுறுத்தியதுடன் விவசாய நிலங்களை விட்டு வெளியேறுமாறும் தெரிவித்துள்ளனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியதுடன் சம்பவ இடத்திற்கு பொலிஸாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....



## வடக்கு-தெற்கு மாணவர்களின் புதுவருடக் கொண்டாட்ட நிகழ்வு

### இன்றும் நாளையும் யாழில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-தெற்கு மாணவர்களின் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் விளக்கும் வகையில் "பனையோலை தென்னோலை" எனும் தொனிப்பொருளில் தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டம் இன்றிலிருந்து 2 நாட்கள் யாழில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை, ஆளுநர் செயலகம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இன்றைய தினம் காலை 6.30 மணிக்கு கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வரும் புகையிரதத்தில் தென்பகுதி மாணவர்கள் 100 பேர் யாழ் மாவட்டத்துக்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் யாழ்.கனகரட்ணம் மகா வித்தியாலயத்துக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு வடபகுதி மாணவர்களும் தென்பகுதி மாணவர்களும் இணைந்து மாலை

24ஆம் பக்கம் பார்க்க....

## சுன்னாகத்தில் நேற்றிரவு இளைஞர் மீது வாள்வெட்டு

### 3 மோட்டார் சைக்கிளில் வந்து துணிகரம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நேற்றைய தினம் இரவு ஒன்பது மணியளவில் வாள்வெட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் சுன்னாகம் வெட்டுக்கட்டி பிள்ளையார் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் கொலையை விளைவிக்கும் கூறிய ஆயுதங்களுடன் ஒன்பது பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் வாள்வெட்டு சம்ப

24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் பெயரில் கிராமம் அமையும்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயரில் கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உதாகம எனும் வீட்டு நிர்மாணத் திட்டமொன்று உருவாக்கப்பட உள்ளதாகவும் அந்த வீட்டுத் திட்டத்தின் ஊடாக அமைக்கப்படும் கிராமங்களுக்கு முன்னாள் தலைவர்களின்

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழரின் பிரச்சினைக்கு ஜனாதிபதி தீர்வளித்தால் உலக நாயகனாக வரலாற்றில் பதியப்படுவார்

### -சிறிதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையாக தீர்த்து வைப்பார் எனின் உலக வரலாற்று நாயகனாக அவர் பதிவு செய்யப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை ஊடங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி

24ஆம் பக்கம் பார்க்க....



## புலிகளின் பாடல்களை செவிமடுத்தவர் கைது

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பாடல்களை செவிமடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் விளக்கமறியலில் வ்வக்கப்பட்டுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) சிவில் உடையில் சென்ற பொலிஸாரினாலேயே 25 வயதுடைய குறித்த

24ஆம் பக்கம் பார்க்க....

## மே 2ஆம் திகதி தொடக்கம் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படும்

### சிற்றுண்டிசாலைகள் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் மே 2 ஆம் திகதி தொடக்கம் உணவுப் பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பெறுமதிசேர் வரி அதிகரிப்பின் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் உரிமையா

24ஆம் பக்கம் பார்க்க....

## தாஜுடீன் கொலை; பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

நாட்டில் 2012ஆம் ஆண்டு மர்மமான முறையில் உயிரிழந்த ரக்பி வீரர் "வாசிம் தாஜுடீனின் கொலை" தொடர்பிலான விசாரணையில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் நடந்தபோது நாரா

24ஆம் பக்கம் பார்க்க....

## கடலுணவு ஏற்றுமதி குறித்த இலங்கை மீதான தடையை ஐரோ.ஒன்றியம் விலக்க முடிபு

(கொழும்பு)

இலங்கையின் கடலுணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்க ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரைக்க முடிவு செய்துள்ளது.

இலங்கை அரசுடனான நீண்ட பேச்சுவார்த்தையின் பின்னர், தடையை நீக்குவதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளை கண்காணிப்பதற்கும் தடுப்பதற்குமான ஏற்பாடுகளை இலங்கை கடைப்பிடிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியே, 2012-ம்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரச சேவையாளர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்கள்

அரச சேவையாளர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவையிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச சேவையாளர்களுக்கு 3 வாகன அனுமதி பத்திரங்களை பெற்று கொடுப்பதற்கு பிரேரணை முன்மொழிவு செய்துள்ளதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்

முதலாவது அனுமதி பத்திரம் அரச சேவையில் இணைந்து 6 வருடங்கள் கடந்த பின்னர் வழங்கப்படவுள்ளது.

இதன் பின்னர் 10 வருடங்களுக்கு ஒரு முறை வாகன அனுமது பத்திரங்களை பெற்று கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வைத்தியர்கள் பொறியியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட அரச துறையை சேர்ந்தவர்களுக்கு வாகன அனுமதி பத்திரம் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது(செ-12)

# உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதிக்கு பதிலாக சுசில்!

அமெரிக்காவில் நடைபெறும் உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு பதிலாக தொழில்நுட்ப விஞ்ஞான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பங்கேற்கவுள்ளார்.

அமெரிக்காவில் உலகத் தலைவர்கள் பங்கேற்கும் பரிஸ் பிரகடனத்தில் கைச்சாத்திடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே விஜயம் செய்வார் என முன்னதாக அறிவிக்கப்பட்டது. எனினும் பின்னர் ஜனாதிபதி தனது அமெரிக்க விஜயத்தை ரத்து செய்தார்.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு பதிலாகவே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமெரிக்க மாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

எரிபொருள் பயன்பாட்டை வரையறுத்து மாற்று சக்தி வளங்களை பயன்படுத்தும் நோக்கில் இந்த பிரகடனம் கைச்சாத்திடப்பட உள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் செயலகத்தின் தலைமைக் காரியாலயத்தில் இன்று பரிஸ் பிரகடனம் குறித்த உலகத் தலைவர்கள் மாநாடு ஆரம்பமாகவுள்ளது. (செ-12)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி குமரேசன்

வரணி தம்பானையைப் பிறப்பிடமாகவும், மாசேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமரேசன் நேற்று (21.04.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் வேலாசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதி, சின்னப்பிள்ளை, கந்தசாமி, இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார் (நோர்வே), உதயகுமாரி, இராஜ்குமார் (ராஜ் பிறிண்டிங்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகதர்சினி (நோர்வே), கலாநிதி விஜயகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), சுமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டிலக்ஷன், அபிசன், லக்ஷிகா, கரிஷ்ராஜ், சாருதன், தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு அரசடி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25/18 அரசடி வீதி,** **தகவல்:**
**கேணியடி,** **குடும்பத்தினர்.**
**திருநெல்வேலி.** (4263) **தொ.பே: 077 668 0013**

# சம்பந்தன், விக்கி நிகழ்ச்சி நிரலே கோத்தா மீதான கைது கோரிக்கை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சாடல்

(கொழும்பு)

அமெரிக்காவில் வைத்து கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டாலோ அல்லது விசாரிக்கப்பட்டாலோ அது இலங்கையில் தனித் தமிழீழம் அமைவதற்காக பாடுபடும் சம்பந்தன், விக்னேஸ்வரன் மற்றும் புலம்பெயர் புலிகளுக்கு கிடைக்கும் வெற்றியாகும் எனத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சமஷ்டி ஆசையை காட்டி தமிழ் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி சிங்கள மக்களை தூண்டி விடுவதே சம்பந்தனின் நிகழ்ச்சி நிரலாகும் என்றும் அவ்வியக்கம் தெரிவித்தது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜையாவார். எனவேதான் விடுதலைப் புலிகள சார்பு புலம்பெயர் அமைப்புக்கள் அவரை கைது செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளன.

இதன் அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டாலோ அல்லது அமெரிக்காவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாலோ அது இலங்கையில் தனித் தமிழீழத்தை அமைப்பதற்கு முயற்சிக்கும் சம்பந்தன், விக்னேஸ்வரன் மற்றும் புலம்பெயர் புலிகளுக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றியாகும் என வசந்த பண்டார குறிப்பிட்டுள்ளார். (செ-12

WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(C-4391)

# மரண அறிவித்தல்

## வினாசித்தம்பி சச்சிதானந்தம்



யாழ்ப்பாணம், யாதம்பை, மாதகலைப் பிறப்பிடமாகவும், இல.40, 6-ம் பண்ணை C, கனகபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு இயக்க பணியாளர் வினாசித்தம்பி சச்சிதானந்தம் அவர்கள் கடந்த 19.04.2016 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், அருந்தவம் (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், திலகவதி, கடம்பமலர், கங்காதேவி, சேராதா, ஸ்ரீமுருகன், பிரணவசோதி, சோதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கந்தசாமி, இராசட்ணம், பரராஜசிங்கன், செல்வராணி, கமலாதேவி, செல்லையா, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், வேல்விழி அவர்களின் மைத்துனனும், நேசகுமாரின் சகலனும், குகன், வேல்கௌரி (சுவிஸ்), ஞானப்பரவை (சுவீடன்), காலஞ்சென்றவர்களான லகன், லக்ஷ்மிஷலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலச்சந்திரன் (சுவிஸ்), கந்தசாமி (சுவீடன்), சந்திராம்பாள் (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனரும், மயூரன், லக்ஷிகா, இலக்கியா, இலக்கணா, லக்ஷலா, கஜன், பவின், சஜன், ஹரிஷ், ஹரிஷா ஆகியோரின் அம்மையாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்துக்கு (கந்தன்குளம்) எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி-4395)

## உங்கள் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

- இன்னொருவர் வாழ்க்கையை மலர வைப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் காண விரும்புகிறீர்களா?
- தற்கொலைச் செய்திகள் வருத்தம் தருகின்றனவா?
- முன்பின் தெரியாதவருக்கும் உதவ நீங்கள் தயாரா?
- மற்றவர்களின் துயரங்களைப் பொறுமையுடன் செவிமடுக்க உங்களால் முடியுமா?

ஒரு தொண்டராகச் சேர்வீர்!

தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது ஒரே நோக்கம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் உணர்வுபூர்வமான ஆதரவை வழங்குகிறோம். எம்முடன் இணைந்து, அர்ப்பணிப்புடன் பணியாற்ற விரும்பின் உடனே தொடர்பு கொள்ளுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்களை ஒதுக்க வேண்டும். சம்பளம் எதுவுமில்லை. ஏற்ற பயிற்சி வழங்கப்படும்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(021) 222 8117 / 077 900 8776
(மு.ப. 9.00 - பி.ப. 1.00)
Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)
(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)
Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)
(சி-4398)

## மதுபானம் விற்ற ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக மதுபானம் விற்ற நபர் ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று இரவு கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.15 மணியளவில் கொக்குவில் கலட்டி சீனியர் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

கைதான நபரிடமிருந்து கலந்த நிலையில் விற்பனைக்கு தயார் செய்யப்பட்ட சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டதாக தெரியவருகிறது. (செ-12)

# கண்ணீர் அஞ்சலி

## சின்னப்பு வேலாயுதபிள்ளை

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் ஸ்ரீ சுபா பேக்கரி உரிமையாளருமாகிய இ.பேரின்பநாயகம் அவர்களின் அன்பு மாமனார் **சின்னப்பு வேலாயுதபிள்ளை** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட பேக்கரி** **நிர்வாகத்தினர்,**
**உரிமையாளர் சங்கம்,** **அங்கத்தவர்கள்,**
**559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** (சி-4397) **பணியாளர்கள்.**

# அனல்மின் நிலையப்பணிகள் இந்த ஆண்டு ஆரம்பமாகும்

## அரசாங்கம் உறுதி

(கொழும்பு)

**சம்பூரில் அனல் மின்நிலையத்தின் மூன்று கட்ட நிர்மாணப் பணிகளும் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், 'முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ள 500 மெகாவோட் அனல்மின் திட்ட கட்டுமானப் பணி தொடர்பான சுற்றாடல் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நாம் முன்னெடுக்க முடியும்.

இந்த அனல் மின் நிலையத்தை இந்தியாவின் தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து ஆரம்பிக்க, 2008 இல் முடிவு செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்ட போதிலும், சூழலியலாளர்கள் மற்றும் அப்பகுதி மக்களின் எதிர்ப்பினால் தாமதம் ஏற்பட்டுள்ளது,


சம்பூர் திட்டம் நிறைவேற்றப்பட்டதும், 1700 மெகா வோட மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சம்பூர் அனல்மின் திட்டம் குறித்து பேச தமிழ்க் கூட்டமைப்புக் கோரவில்லை

### பிரதியமைச்சர் பெரேரா தெரிவிப்பு

சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கோரிக்கை எதையும் விடுக்கவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சம்பூர் அனல் மின் திட்டம் தொடர்பாக இந்தியாவுடன் பேசப் போவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருப்பது தொடர்பாக, கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், பிரதி மின்சக்தி அமைச்சர் அஜித் பெரேரா, மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.



இந்த விவகாரம் தொடர்பாக அரசாங்கம் இந்தியாவுடன் கலந்துரை யாடவில்லை. இந்தியாவு டன் பேசுவதற்கு எந்த கட்சிக்கும் உரிமையுள்ளது. ஆனால், எம்முடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கோரிக்கை எதையும் விடுக்கவில்லை.

2017இல் சம்பூர் அனல் மின் திட்டம் நிறைவடையும் என்று இனிமேலும் நாம் எதிர்பார்த்திருக்க முடியாது.

2018ஆம் ஆண்டு ஏற்படவுள்ள பாரிய மின் தட்டுப்பாட்டு நெருக்கடியைச் சமாளிக்க, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கத்தக்க வளங்களைக் கொண்டு மின் சக்தி உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டும்.

நாட்டின் தற்போதைய அபிவிருத்தி வளர்ச்சியின் அடிப்படையில், 2018ஆம் ஆண்டு, மேலதிகமாக 100 மெகாவோட், மின்சாரம் தேவைப்படும் என்று மின்சார சபை கணிப்பிட்டுள்ளது.

சம்பூர் அனல் மின் நிலையம் தாமதமாவதால், இந்த நெருக்கடியைக் சமாளிக்க, மூன்று சூரியசக்தி மின் நிலையங்களையும், மன்னாரில் ஒரு காற்றாலை மின் நிலையத்தையும், ஒரு திரவ எரிவாயு மின் நிலையத்தையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பரிகார நீதியே அரசியல் தீர்வுக்கான பொறிமுறையாக அமையும்

### நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்தல்

இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பரிகாரநீதியே, ஈழத்தமிழர்களது அரசியல் தீர்வுக்கான பொறிமுறையாக அமையும் எனும் நிலைப்பாட்டுக்கு அமைய ஜேர்மனியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பொதுக்கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

நாளை 23ஆம் திகதி சனிக்கிழமை, டோட்முண்ட் நகரில் (Immermannstr 36,44147 Dortmund ) பிற்பகல் 2:30 மணிக்கு இப் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஐ.நா.மனித உரிமைச் சபைத் தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு, இலங்கையின் நிலைப்பாட்டை கண்காணிக்கவென நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு (*Sri Lanka Monitoring Accountability Panel (MAP) தொடர்பிலான செயற்பாடு.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் நற்பதாவது ஆண்டில் அதன்அரசியற் பரிமாணம் குறித்தான செயலியக்கம் ஆகிய விடயங்கள் இப் பொதுக்கூட்டத்தில் பிரதானமாக பேசப்படவிருக்கின்றன.

இதில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் இணையவழி காணொளி பரிவர்த்தனை வழியே பங்கெடுக்கவுள்ளார்.

அத்துடன், நாடு கடந்த அரசின் ஊடகம் மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் சுதன்ராஜ்ும் நேரடியாக பங்கெடுத்துக் கொள்ளவுள்ளார்.

கருத்துரைகள், கேள்வி பதில், கருத்துப்பரிமாற்றமென பொதுமக்கள் அரங்காக இந்நிகழ்வு இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மற்றுமொரு நெருக்கடிக்குள் சிக்கவுள்ள யோஷித ராஜபக்ஷ

இலங்கை கடற்படையில் யோஷித ராஜபக்ஷ மேற்கொண்ட முறையற்ற செயற்பாடுகள் தொடர்பான விசாரணை அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பான நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்கவுள்ளதாக இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

லெப்டினன் யோசித ராஜபகஷவின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த கடற்படைத் தளபதியால் சிறப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டுளளது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர பதிலளித்தார். யோஷித ராஜபக்ஷ கடற்படையில் சேர்த்துக் கொள் ளப்பட்ட விதம் மற்றும் வெளி நாடுகளுக்கு பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டமை தொடர்பான அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என இராணுவ பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சாவகச்சேரி நகரில் பொதுநோக்கு மண்டபம்

கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகர கிராம சேவையாளர் பிரிவில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்போது வெள்ள வாய்க்கால் அமைத்தல், சிறிய வீதி அமைத்தல் மற்றும் அறநெறி பாடசாலைக்கான மண்டபம் அமைத்தல், போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் சமூக மட்டத்தில் இயங்குகின்ற அனைத்து அமைப்புக்களுக்கும் பயன்படுத்துவதற்கு ஒரு பொதுவான மண்டபம் தேவை என்ற விடயம் அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து பொது நோக்கு மண்டபம் அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காணியான சுமார் இரண்டு பரப்பினை சாவகச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் கோவிலின் தர்மகர்த்தா கருணாகரன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இக்கலந்துரையாடலில் கிராமத்தில் உள்ள சுமார் ஒன்பது சமூகமட்ட அமைப்புக்களைச் சேர்ந்தோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-89)

## பயங்கரவாதத்தை ஒழிக்க உதவி செய்த பாகிஸ்தான்

இலங்கைக்கு பாகிஸ்தான் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான பாகிஸ்தானிய உதவி உயர்ஸ்தானிகர்ஷராஸ் அஹ்மட் கான இதனை தெரிவித்துள்ளார். இலங்கையில் பயங்கர வாத ஒழிப்பின் போது பாகிஸ்தான் முழுமையான ஆதரவை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையின் சபாநாய கர் கரு ஜயசூரிய உட்பட்ட அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள் மற்றும் கல்வியியலாளர்கள் நேற்று முன்தினம் பஞ்சாப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர். இதன் போதே இந்த கருத்தை உதவி உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். இதே வேளை இலங்கைக்கு கல்வி உட்பட்ட ஏனைய விடயங்களிலும் பாகிஸ்தான் உதவியளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## யாழ். மாவட்டத்திற்கு 39,000 வீடுகள் இன்னும் தேவை

### அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் தற்போது 39 ஆயிரம் வீடுகள் தேவையென இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளில் வீட்டின் தேவை அவசியமாகவுள்ளது. இந்த வருடம் மீள்குடியேற்ற அமைச்சினால் 8 இலட்சம் ரூபா பெறுமதியான 3 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை அண்மையில் மீள குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவுள்ளோம். அமைச்சினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய தற்போது ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பயனாளிகள் தெரிவு நடைபெறுகிறது. அதற்குரிய படிவங்கள் வழங்கப்படுகிறது.

வீட்டுத்திட்டத்துக்கான தெரிவில் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும் என்பதற்காக இம்முறை பயனாளிகளின் தெரிவை பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தவுள்ளோம். பிரதேச செயலர் பிரிவில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பயனாளிகள் தெரிவில் ஏதும் குறைபாடுகள் இருப்பின் அவர்களிடம் முறையிடலாம். அவர்கள் அதற்கான விசாரணைகளை மேற்கொள்வார்கள். அதிலும் தீர்வு காணப்படாத பட்சத்தில் மாவட்டச் செயலகத்தில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் முறையிட முடியும். இவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வார்கள். குறித்த 3 ஆயிரம் வீட்டுத்திட்ட பணிகள் எதிர்வரும் மே மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் பொருத்து வீடு தொடர்பான இறுதியான முடிவு எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை. பொதுமக்கள் அதிகமாக கல் வீட்டை தான் விரும்புகிறார்கள். ஆனால் கல் வீடு கிடைக்காத பட்சத்தில் பொருத்து வீட்டையாவது தருமாறு மக்கள் கோரியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அகவை 60இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




**திரு.நடேசு இராமநாதன்**
**(SLTS -I)**
**(அதிபர் - மு/முறிப்பு தமிழ் வித்தியாலயம் முள்ளியவளை)**

எமது பாடசாலையின் அதிபராக கடந்த மூன்று வருடங்களாக அரும்பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.நடேசு இராமநாதன் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்தி வழியனுப்புகிறோம் என்றென்றும் நீடூழி வாழியவே

**பாடசாலை சமூகம்**
**மு/முறிப்பு தமிழ் வித்தியாலயம்**
**முள்ளியவளை.**

(சி-4396)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு.சி.இளங்கோ அவர்களின்
அன்புத் தந்தையார்


## கந்தையா சிவகுரு

அவர்கள் நேற்று (21.04.2016) அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**தகவல் :**
**வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலய பாடசாலைச் சமூகம்.**

(4261)

# மரண அறிவித்தல்



## கந்தையா சிவகுரு

**(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/பெரியபுலம் மகா வித்தியாலயம், முன்னாள் தலைவர் - வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார் கோவில், ஸ்தாபகர் - ஐங்கரன் சனசமூக நிலையம்)**

பாலாவி தெற்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுரு அவர்கள் நேற்று (21.04.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானி, இளங்கோ, அருள்நந்தி - (அருள் நகையகம் உரிமையாளர், யாழ்ப்பாணம்), அருட்செல்வன் (செல்வா களஞ்சியம் வண்ணார்பண்ணை), காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் கலைவாணி (ஜேர்மனி, முன்னாள் ஆசிரியை -நயினா தீவு மகா வித்தியாலயம்), சிவரஞ்சினி (முகாமைத்துவ உதவியாளர்- பாண்டியன் குளம், AGA அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), துளசி, சுகந்தினி, ஜெதீஸ்வரன் (ஜேர்மனி), மதிவண்ணன் (புகையிரதத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குகதர்சன், சுதர்சன் (முகாமைத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), சங்கவி, இளங்கீரன், வேர்ஜிகா, லிகாயுதன், கலையரசி, ஜெசிக்கா, ஜெசிதன், கம்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**சி.இளங்கோ**
**(அதிபர்- யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)**

**முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

(4260)

**தொ.பே : 078 460 7816**

# கண்ணீர் அஞ்சலி




## கந்தையா சிவகுரு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரசார செயலாளரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உபதலைவருமான திரு.சி.இளங்கோ அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4262)

**இல.16, மணற்தரை**
**ஒழுங்கை, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**பிரிவுத் துயரில்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,**
**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**




யாழ்.உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதிபர் கா.ரவீந்திரபாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கலந்து கொண்டிருந்தார்.


# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி ஸ்ரீ நகுலமீரா சிதம்பரநாதன்

பிறப்பு 16.05.1947 — இறப்பு 21.04.2008

திதி: அபரபக்க பிரதமை

நீள நினைப்பதற்குரிய தாயே
நெஞ்சம்-மறக்குமா உங்களை
வாழ வழிகாட்டிய எங்களின் தாயே
மனையெல்லாம் வாட்டுதம்மா
எட்டாண்டுகள் ஓடிச் சென்றாலும்
எப்படி அம்மா உங்களை
மறக்க முடியும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

இங்ஙனம்
கணவர் ,பிள்ளைகள்,
மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள்


# இராசி பலன்

22.04.2016
(சித்திரை 09, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பூரணை முற்பகல் 10.57 மணிவரை
சித்திரை காலை 7.19 மணிவரை
சுபநேரம் 6.01-7.31 மணிவரை
இராகுகாலம் 10.31-12.01 மணிவரை

வள்வன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் ரேவதி | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல்நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம்.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் சிறு தடைகள், தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


**மகரம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட்டு விலகும்.

# சுழிபுரம் சவுக்குக் காட்டில் திடீரென ஏற்பட்ட தீ பரம்பல்

## ஒரு கிலோ மீற்றர் வரையான காடு எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் சவுக்குக் காட்டில் திடீரென பரவிய தீயினால் ஒரு கிலோமீற்றர் நீளமான சவுக்கம் காடு எரிந்து அழிந்துள்ளது. நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ அனர்த்தத்தினால் ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து உருவாக்கப்பட்ட சவுக்கு மரங்கள் எரிந்து அழிந்துள்ளன.

கடற்படையினரும் கடற்றொழிலாளர்களும் கடுமையாக போராடியதால் தீ ஏனைய இடங்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது. ஆனாலும், 500 இற்கு மேற்பட்ட சவுக்கு மரங்கள் முற்றாக எரிந்து அழிந்தன. தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

குறித்த சவுக்கம் காட்டில் தீ பரவியதை அவதானித்த கடற்றொழிலாளர்கள் கடற்படையினருக்கு அறிவித்தனர். அங்கு சென்ற கடற்படையினர் தீயணைப்பு வாகனம் மற்றும் தண்ணீர் பவுசர்கள் என்பவற்றை வரவழைத்து கடற்றொழிலாளர்களுடன் இணைந்து தீயை அணைக்க முயற்சித்தனர். பெரும் போராட்டத்தின் மத்தியில் தீ கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கேள்வியுற்ற வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் திட்டமிடல் அதிகாரி மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர். இதேவேளை, தாங்கள் பல வருடங்களாக கஷ்டப்பட்டு உருவாக்கிய சவுக்கம் காடு தீயில் எரிந்து அழிந்துள்ளமை தொடர்பாக தொழிலாளர்கள் அனைவரும் மிகுந்த கவலையடைந்துள்ளதாக சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் லோ. கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சவுக்கம் காட்டினைப் பாதுகாப்பதற்காகவும் கரையோரத்தைப் பாதுகாப்பதற்காகவும் தமது கடற்றொழிலாளர் சங்கம் வருடாந்தம் குறிப்பிட்டளவு நிதியை செலவிடுவதாகவும் தெரிவித்த மேற்படி சங்கத் தலைவர், எரிந்த இடத்தில் மீண்டும் சவுக்கு மரங்களை நாட்டி வளர்ப்பதற்கு தங்களுக்கு உதவி செய்யுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் கூட நாகர் கோவில் சவுக்கம் காட்டில் விசமிகள் தீவைத்து சவுக்கம் மரங்களை திருடிச் செல்ல முற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குறித்த சவுக்கு மரங்களை பாதுகாப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிர அக்கறை காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்தூயசூசையப்பர் ஆலய திருவிழா இன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ் தலைமையில் 10 நாட்கள் நடைபெறவுள்ள இத் திருவிழாவில் நவநாள் திருப்பலிகள் மாலை 6 மணிக்கு நடைபெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை நற்கருணைப் பவனி இடம்பெறுவதோடு மே மாதம் முதலாம் திகதி காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலி ஆரம்பமாகும். திருப்பலி முடிவில் திருச்சொருபப் பவனி இடம்பெறும். (இ-9)

## காலாண்டிதழ் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

எழுகலை இலக்கியப் பேரவையின் வெளியீடான தளவாசல் என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தளவாசல் பிரதம ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூல்வெளியீட்டுரையினை தளவாசல் இணை ஆசிரியர் ந.மயூரரூபன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

## சுதுமலை மலை வேப்படி வீதி எப்போது புனரமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஜே/129 சுதுமலை வடக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மலை வேப்படி வீதி(குச்சிப்பாய் வீதி) யானது சுமார் 30வருடங்களுக்கு மேலாக திருத்தமின்றிக் காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் வீதியை இணைக்கும் முக்கிய வீதியாக இவ்வீதி காணப்படுகின்றது.

50குடும்பங்களுக்கு மேல் பாவனையில் உள்ள இவ்வீதியானது கவனிப்பாரின்றிய நிலையில் காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழைகாலம் என்றால் வீதியானது சேறும் சகதியுமாக காணப்படுவதுடன் வீதிப்போக்குவரத்துகளும் சீர்ற்ற முறையில் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மகஜர் அடங்கிய பிரதி வலி. தென்மேற்கு பிரதேச சபை செயலாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## அருள்ஒளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வெளியீடான அருள்ஒளி மாதாந்த சஞ்சிகையின் 113 ஆவது பங்குனி–சித்திரை மாதத்திற்கு இதழ் வெளிவந்துள்ளது.(இ-5)

## சவுக்கம் காட்டின் பாதுகாப்பு; துப்புரவாக்கல் செயற்றிட்டம்

### பங்களிப்பை நல்க அரச அதிபர் அழைப்பு

உலக புவி தினத்தை முன்னிட்டு "சமூக ஒருங்கிணைப்பு மற்றும் அடைவுகளுக்கான நட்புறவு செயலாற்றுகை" எனும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இன்று வடமராட்சி மணற்காடு கிராமத்தில் உள்ள சவுக்கம் காட்டின் பாதுகாப்பு மற்றும் துப்புரவு செய்தல் போன்ற செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதில் யாழ்.மாவட்டத்தின் சகல மட்டங்களிலும் உள்ள ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மனித வளங்களினை தொண்டர் அடிப்படையில் ஒழுங்கமைத்து சவுக்கம் காட்டின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால நடவடிக்கைக்கான பொறிமுறைகளை உருவாக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மணற்காடு தீப்பற்றும் சம்பவங்கள் பல தடைவைகள் இடம்பெற்றுள்ளன. எமது சூழலை பாதுகாப்பது எமது அனைவரதும் கடமையும் பொறுப்புமாகும்.

அந்த வகையில் இந்த நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு யாழ்.மாவட்ட செயலகம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, யாழ். பல்கலைக்கழக புவியியல் பட்டதாரிகளின் பழைய மாணவர் சங்கம், சமூக ஒருங்கிணைப்பு நட்புறவு செயற்பாட்டு முகவர் போன்றவற்றினால் முன்மொழியப்பட்டு சவுக்கம் காட்டுப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் இயற்கை வளங்களில் அருமையான காட்டு வளம், நன்னீர் வளம் (மணற்காடு நீர்ப்படுக்கை), கனியவளம் (மணல்), கடல் வளம் மற்றும் சுற்றுலாத் துறைக்கான உள்ளார்ந்த வாய்ப்பினைக்கொண்டு அமைந்திருக்கும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மணற்காடு கிராமத்தின் சவுக்கம் காட்டின் பாதுகாப்பு மற்றும் நிலவளத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடு ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறிப்பாக எதிர்கால வாய்ப்புகளுக்கான விழிப்புணர்வினை சகல மட்டங்களிலும் வெளிக்கொணர்தல், யாழ். மாவட்டத்தின் நன்னீர் படுக்கையில் ஒன்றான மணற்காட்டின் வளத்தினை பாதுகாத்தல், கடல் உள்வருகை, சுனாமி, கரையோர பாதுகாப்பு போன்ற விடயங்களை ஸ்திரப்படுத்தல், வருடாந்தம் ஏற்படும் தீ அனர்த்தத்தினை கட்டுப்படுத்தல் போன்ற நோக்கங்களை முன்வைத்து நடைபெறவுள்ளது.

நாளை காலை 6 மணி தொடக்கம் 51 பங்குதாரர்களை அடிப்படையாகக் கொண்டு அரச, தனியார் துறையினர்,15 பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி திணைக்களங்கள், முப்படையினர், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகத்தினர் இணைந்து 28 துண்டங்களாக பிரிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். தொண்டர்களுக்கான பேருந்து சேவைகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையில் அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வின் இலக்கை அடைவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

## வட மாகாண சபையின் நியமனங்கள் நீதியான முறையில் இடம்பெறுகின்றன

### அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

வடக்கு மாகாணசபையின் மூலம் வழங்கப்படும் நியமனங்களில் எமக்குத்தெரிந்தவர், எமக்கு வாக்களித்தவர் என்று எந்த முன்னுரிமைகளும் வழங்கப்படுவதில்லை. பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நீதியரசர் ஒருவரை முதல்வராகக்கொண்டு இயக்கப்படும் மர்காண நிர்வாகத்தில் நியமனங்கள் யாவும் நீதியான முறையில் தகுதிகளின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையால் முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதிகள், அலுவலகப் பணியாளர்கள் ஆகிய பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 160 பேருக்கு கடந்த திங்கட்கிழமை நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எங்களிடம் தினமும் ஏராளமானோர் வேலை தேடி வருகிறார்கள். சுயமாகத் தொழில்முனைவோராக மாற எவருக்கும் விருப்பமில்லை. எல்லோரும் அரச பணிகளில் நியமனம் பெறவே விரும்புகிறார்கள். எங்களுக்கு வாக்களித்ததாகக் கூறி வேலை தருமாறு கேட்கிறார்கள். மத்திய அமைச்சர்கள் சிலரின் பெயர்களைக்கூறி நூற்றுக்கணக்கில் அவர்களது ஆதரவாளர்களுக்கு அவர்கள் வேலை பெற்றுக் கொடுக்கிறார்கள், உங்களால் ஏன் முடியவில்லை என்று கேட்கிறார்கள்.

மாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கு மாத்திரமே மாகாணசபையால் நியமனங்களை வழங்க முடியும். அதுவும் பரீட்சைகள் நடத்தி, நேர்முகத் தேர்வுகள் வைத்து தகுதியின் அடிப்படையிலேயே மாகாணசபை நியமனங்களை வழங்குகிறது. முறையற்ற விதத்தில் எவ்வகையான நியமனங்களையும் யாரும் வழங்கிவிட முடியாது என்பதை எங்களிடம் வேலை கேட்டு வருபவர்களுக்கு நாங்கள் விளக்கி வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

தரம்-5 மாணவர்களுக்கான
**புலமைப்பரிசில் பரீட்சை** — மாதிரி வினாத்தாள் இல-07

பகுதி-II **தமிழ்க் கல்விக் கழகம்**

**விடைகள்**

**(20.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

01. 1. புத்திசாலி
    2.விஞ்ஞானி
    3.மூளைக்கு வேலை கொடுக்கவேண்டும்
    4.நமது
    5.கண்டு + அறிந்து
    6.சுறுசுறுப்பு
02. 1.வயலில்
    2.பசுவோடு
03. 1.வறுமையிலும் செம்மை
    2.ஆசை எல்லை கடந்தால் துன்பம்
04. 1.இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
    2.தபால்பெட்டி இலக்கம்
05. 1.கவனமாக இருத்தல்
    2.துன்பம் விலகுதல்
06. 1.நேரடியாகப் பேசுதல்
    2.பதற்றக்காரன்
07. 1.நேற்று பெய்த மழையால் குளம் நிறைந்தது
    2.ஓய்வு நேரத்தை வீணாக்காமல் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்
08. 1.கண்களை மூடுங்கள்
    2.உங்களுக்குப் பால் விருப்பமா?
09. 1.Butterfly
    2.Elephant
10. 1.தேங்காய் ஒன்றின் விலை என்ன?
    2.அதிபர் சென்றாரா?
11. 1.வித்யாகரய
    2.ஹசனுகற
12. காடழிப்புக்களை அதிகளவில் மேற்கொள்வதனால் நாட்டில் மழை வளம் குன்றிக் காணப்படுகிறது
    சட்டவிரோதமாக மணல் அகழ்வுகளினால் கடற்கரையோரப் பகுதிகள் நில அரிப்பிற்கு உள்ளாகின்றன
    நிலத்தின் கீழ் பாதுகாப்பின்றிச் செலுத்தப்படும் தொழிற்சாலைக் கழிவுகளால் நீர்வளம் மாசடைந்து வருகின்றது
13. 1.800
    2.மூன்றாயிரத்து அறுநூற்று ஐம்பத்தொன்பது
    3.11478
    4.22cm
    5.2504
    6.VI
    7.4951
    8.6 kg 957 g
    9.1.5m
    10.22 பேருந்து தேவைப்படும்
    11.5/8
    12.மு.ப.11.24
    ◆.90km, 40km
15. ரூபாய் 68.00

| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 02) 4 | 03) 1 | 04) 2 |
| 05) 3 | 06) 3 | 07) 2 | 08) 3 |
| 09) 4 | 10) 3 | 11) 3 | 12) 1 |
| 13) 4 | 14) 1 | 15) 3 | 16) 4 |
| 17) 1 | 18) 2 | 19) 3 | 20) 4 |
| 21) 2 | 22) 2 | 23) 2 | 24) 3 |
| 25) 3 | 26) 2 | 27) 2 | 28) 4 |
| 29) 3 | 30) 3 | | |

# நான் உத்தமன்



## அளவுக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக பொய்ப் பிரசாரம் செய்யப்படுகிறது-கோத்தா

(கொழும்பு)

ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதைப் போன்று தன்னிடம் எதுவித சொத்துக்களும் கிடையாது என்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாரிய மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் அவர் அளித்த சாட்சியம் குறித்த தகவல்கள் தற்போது ஊடகங்களுக்கு கசிந்துள்ளன.

நான் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய போதிலும் அமைச்சின் கடமைகளும் பொறுப்புகளும்வேறு செயலாளர்களிடமும் பிரித்துக்கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் ரக்னா லங்கா மற்றும் அவன் கார்ட் விவகாரங்களைக் கவனித்துக் கொண்டவர் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்னவாகும்.

அதற்கும் எனக்கும் தொடரபில்லை. அதில் முறைகேடுகள் நடந்திருந்தால் நான் பொறுப்பில்லை.

நான் ஒரு கீர்த்தி மிக்க இராணுவ அதிகாரி. எனது சேவைக்காலத்தில் பெற்ற அனைத்துப் பதக்கங்களும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் எனக்கு வழங்கப்பட்டவைதான். நான் கடமை என்று வந்து விட்டால் கட்சி பேதம் பார்ப்பதில்லை.

என்னிடம் பாரிய சொத்துக்கள் இருப்பதாகவும், பல இடங்களில் நான் சொத்துக்களை வாங்கிப் போட்டிருப்பதாகவும் ஊடகங்களில் ஒரு பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் நான் 2005 ஆம் ஆண்டு பாதுகாப்புச் செயலாளர் பதவியைப் பொறுப்பெடுக்கும்போது அளித்த சொத்துப்பட்டியல் தவிர புதிதாக வேறெந்த சொத்தும் என்னிடம் இல்லை என்றும் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

தன்னிடம் எதுவித சொத்துக்களும் இல்லை என்று மறுக்கும் இதே கோத்தபாய ராஜபக்ஷதான் தனது ஒரே புதல்வனான தமிந்த மனோஜ் ராஜபக்ஷவின் திருமண வைபவத்தின் போது சுமார் 100 மில்லியன் ரூபாவை செலவழித்து பாரிய விருந்து வைபவம் ஒன்றை நடத்தியிருந்தார்.

2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இந்தப் பாரிய விருந்து வைபவம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 63செவ் 7 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:B.COM, PGDE, NDT, MA/அரசதொழில்<br>தொ.இ: B/5778 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 16செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5050 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 18செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5779 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 34செவ் 7 இல்<br>உயரம்: 5'9''<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5054 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 26<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:MBA, CIMA/கணக்காளர்<br>தொ.இ: B/5781 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்BSc, MBA/அரச தொழில்<br>தொ.இ: G/5058 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5782 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 26செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5061 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


# தூய நீக்கிலார் ஆலய வருடாந்தத் திருவிழா



நாவாந்துறை தூய நீக்கிலார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தினமும் திருப்பலிகள் மாலை 5.30 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். இத்திருப்பலிக்கு மறையுரைகள் அமலமரித் தியாகிகள் சபையின் அருட்தந்தை யா.றமேஸ் அமதி அடிகளாரால் வழங்கப்படும். அத்துடன் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்குத் திருச்செபமாலை திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

மறுநாள் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் தலைமையில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தோப்பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (இ)

## 19 சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ்

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 553 ஏக்கரில் சிறுபோகம்

(மல்லாவி)

**ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத் திற்குட்பட்ட 19 சிறிய நீர்ப்பாசனக் குளங் களின் கீழ் 553 ஏக்கரில் சிறுபோக செய் கையாக நெல் பயிரிடப்பட்டுள்ளதாக ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் ம.சற்குண நேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான்பிரதேசத்தின்பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்தை யன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் காரணமாக இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற் கொள் ளப்படவில்லை.

இந் நிலையில் இப் பிரதேச மக் களின் வாழ்வாதாரத்தை கருத்திற் கொண்டு சிறிய நீர்ப்பாசனத்தில் காணப்படும் நீரின் அளவைக் கொண்டு சிறுபோக நெற்செய்கை 19 குளங்களின் கீழ் 553 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கற்சிலைமடு பெரிய குளத்தில் 37 ஏக்கர் குடி தாங்கிய குளம் 25 ஏக்கர், காக்க பனிக்கன்குளம் 12 ஏக்கர், காதலி யார் சமணங்குளம் 30 ஏக்கர், பனிச்சமுறிப்பு குளம், 17 ஏக்கர், பட்டைக்காட்டுக்குளம் 10 ஏக்கர், கருவேலன்கண்டல் குளம் 23 ஏக்கர், புளியங்குளம் 15 ஏக்கர், சின்ன இத்திமடு 16 ஏக்கர், கூழா முறிப்பு குளம், 38 ஏக்கர், ஒதியமலை 55 ஏக்கர், பெரியகுளம் 77 ஏக்கர், தண்டுவான்குளம் 25 ஏக்கர், குஞ் சுக்குளம் 6 ஏக்கர், நாகதேவன் குளம் 3 ஏக்கர் ,பெரிய இத்திமடுக் குளம் 52 ஏக்கர், தவசிகுளம் 19 ஏக்கர், பழம் பாசிக்குளம் 38 ஏக்கர், பெரிய கோடாரி கல்லுக்குளம் 55 ஏக்கர் ஆகிய குளங்களின் கீழ் 553 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள் ளார். (2-3-15)

## முல்லையில் பதிவு செய்யப்படாது இயங்கும் நிறுவனங்கள்; உரிமைகள் பாதிக்கப்படுவதாக ஊழியர்கள் முறையீடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் திணைக்களத்தின் அனு வகைம் இயங்கிவருகின்ற போதும் இதுவரை பல நிறுவனங்கள், கடைகள், வெதுப்பகங்கள் என்பன பதிவு செய்யப்படாது ஊழியர்களிற் கான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய வற்றை செலுத்தாது செயற்பட்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது உரிமைகள் மறுக்கப்படுவதாக ஊழியர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இது மட்டுமன்றி தாம் வேலை செய்யும் இடங்களில் வேலைக்கேற்ற சம்ப ளம் வழங்கப்படுவதில்லை என் றும் அண்மையில் அறிவிக்கப்பட்ட தனியார் துறையினருக்கான 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபா சம்பள அதிகரிப்பு தமக்கு வழங்கப் படவில்லை எனவும் அவர்கள் சுட் டிக்காட்டுகின்றனர். சில நிறுவனங் களில் தாம் பகலில் வேலை செய் தாலும் இரவு நேரங்கள் முழுவதும் விழித்திருந்து வேலை செய்தாலும் ஒரே அளவான சம்பளமே வழங் கப்படுவதாகவும் கவலை வெளி யிட்டுள்ளனர். இதேநேரம் தாம் வேலை செய்யும் சில இடங்களில் தமக்கான அடிப்படை வசதிகள் எதுவு மில்லை எனவும் சுட்டிக்காட்டு கின்றனர்.

குறிப்பாக கழிப்பறை வசதிகளோ குடிதண்ணீர் வசதிகளோ எதுவு மற்ற நிலையிலேயே வேலை செய் வதாகவும் அவர்கள் கூறுகின்ற னர். மேலும் சில நிறுவனங்களில் தாம் விரும்பிய நேரத்தில் பணி யாளர்களை நீக்கிவிட்டு புதிய பணி யாளர்களை வேலைக்கு அமர்த் துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட தொழில் திணைக்களம் ஊழியர்களின உரிமைகள் அடிப்படை வசதிகளை நிலை நாட்ட முயல வேண்டுமென பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-281)






போரினால் பாதிக்கப்பட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நலிவுற்ற நிலை யில் உள்ள மாணவர்களிற்கு யாழ்.எயிட்டால் கற்றல் மேம் பாட்டின் பொருட்டு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் கற்றல் உபக ரணங்கள் பாடசாலை நூல் நிலையத்திற்கான ஒரு தொகுதி நூல்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

## காத்தவராயன் சிந்துநடைக் கூத்து போட்டி முடிவுகள்

(பனிக்கன்குளம்)

வன்னிக் குறோஸ் கலாசார பேரவை கடந்த 17 ஆம் திகதி மு/ வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் முல்லைத்தீவு மாவட்டத் திற்குட்பட்ட கலாமன்றங்களுக்கிடையில் நடத்திய காத்தவராயன் சிந்துநடைக்கூத்து போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய எட்டு கலாமன்றங்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் பொன்னகர் முள்ளியவளை பாரதி கலாமன்றம் முதலாமிடத்தையும் துணுக்காய் மல்லாவி தமிழ்த்தாய் கலாமன்றம் இரண்டாமிடத்தையும் பொன்னகர் முள்ளியவளை வரசித்திவிநாயகர் இளந்தளிர் கலாமன்றமும் 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு ஸ்ரீமுத்துமாரி கலாமன்றமும் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளன.

இந்த கூத்துப் போட்டிகளை நெறியாள்கை செய்த எட்டு அண்ணா விமார்களிலே சிறந்த அண்ணாவியாராக பொன்னகர் முள்ளியவளையை சேர்ந்த பாரதி கலாமன்றம் அண்ணாவியர் ச.கந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார். (2-3-281)

## மன்.சுற்றுலாத் தளத்தின் மண்திட்டி கடல் அரிப்பினால் அழிவடைகின்றது

### பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

சுற்றுலாத்தளங்களில் ஒன்றாக மாறி வரும் மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் அமைந் துள்ள மண்திட்டி கடல் அரிப்பினால் அழிவடைந்து செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மண்திட்டியினை மன்னார் மக்கள் உள்ளிட்ட வெளியூர் உல்லாசப் பயணிகளும் மாலை நேரங்களில் பொழுதைக் களிக்க பயன்படுத்தி வருகின்றனர். மன்னாரை பொறு த்த மட்டில் சுற்றுலாத் தளங்கள்



மிகக் குறைவாகவே காணப் படுகின்றன. இதனால் மன்னாரின் சுற்றுலாத் தளமாக குறித்த பகுதி மாறி வருகின்றது.

இவ்வாறான நிலையில் கடந்த காலங்களில் அதனை சுற்றுலா தள மாக அமைப்பதற்கு உள்ளூராட்சிமன்ற அமைச்சு திட்டங்களை செயற்படுத்த முற்பட்ட போது கடந்தகால மன்னார் நகர சபையினால் முனைப் புகள் முன்னெடுக்கப்பட்டன.

அக்காலப் பகுதியில் பறவை கள் சரணாலய பகுதியாக காணப் பட்ட போதிலும் மன்னார் நகரசபை அதனை மேற்பார்வை செய்து வந்துள்ளது.

எனினும் உள்ளூராட்சிமன்றங் களின் காலம் நிறைவடைந்த நிலை யில் அதன் செயற்பாடுகள் நிற் போடப்பட்டன. இந்நிலையில் குறித்த மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மண் திட்டி கடல் அலையினால் அரிக்கப்பட்டு அழியும் நிலை உருவாகி வருவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மன்னார்நகர்புறமக்கள்பொழுதை கழிக்க பெரிதும்விரும்பித்துடன் குறித்த பகுதிக்கே சென்று வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியிலுள்ள மண்திட்டி கடலரிப்பினால் அழி வடைந்து வருவதால் சுற்றுலாத் துறை ஆர்வலர்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகம் சுற்றுலாதளமாக மக்கள் விரும்பி செல்லும் குறித்த மண்திட்டியை கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்ற னர். (2-3-281)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 181 சிறுவர்கள் தாய்/ தந்தையை இழப்பு

### உதவ முன்வருவோர் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்க!

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் இடப் பெயர்வின் பின்னர் 2 ஆயிரத்து 890 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 100 அங்கத்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு பெற்றோர்களை இழந்த சிறுவர்களும் தாய் அல்லது தந்தையை இழந்த நிலையில் 162 சிறுவர்களுமாக மொத்தம் 181 சிறு வர்கள் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் உறவினர்களுடன் தங்கி வாழ்ந்து வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக் கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செய லக பிரிவில் பெற்றோரை இழந்த நிலையில் ஆண்கள் 11 பேரும் பெண்கள் 8 பேருமாக மொத்தம் 19 சிறுவர்கள் தமது வயோதிப பாட்டன் பாட்டியுடன் வாழ்ந்து வருகின்றனர்.



மேலும் தந்தையை இழந்த நிலையில் ஆண்கள் 67 பேரும் பெண்கள் 65 பேருமாக மொத்தம் 132 பேர் காணப்படுகின்றனர்.

தாயை இழந்த நிலையில் ஆண் கள் 14 பேர் ,பெண்கள் 16 பேருமாக மொத்தம் 30பேர் பல்வேறு துன்பங் களுக்கு மத்தியில் வாழ்ந்து வரு கின்றனர். இச் சிறுவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் மாந்தை கிழ க்கு பிரதேச செயலகத்துடன் தொட ர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியுமென அவர் மேலும் தெரிவித் துள்ளார். (2-3-15)

## நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக

# பறவைக்காவடி எடுத்து வந்த உழவு இயந்திரம் கவிழ்ந்து வீழ்ந்ததில் இளைஞன் உயிரிழப்பு

## மாங்குளம் பிரதான வீதியில் பரிதாப சம்பவம்

முல்லைத்தீவுமாவட்டத்தின் அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக பறவைக்காவடி எடுத்து வந்த இளைஞன் ஒருவன் உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்தில் பரிதாபமாக மரணமடைந்தான்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் மாங்குளம் வீதியில் நடைபெற்றது.

இதில் முத்தையன்கட்டு இடதுகரை முதலாம் கண்டத்தைச் சேர்ந்த வசந்தகுமார் கஜதீபன்(வயது-24) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மம்மில் பிள்ளையார் ஆலயத்தில் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்-ஆலயத்தில் இருந்து பிரஸ்தாப இளைஞன் உழவு இயந்திரத்தில் பறவைக் காவடி எடுத்துக் கொண்டு ஆலய வீதியை சுற்றி வந்து ஆலயத்தின் பிரதான வாயில் வழியாக வெளியேறி மாங்குளம் பிரதான வீதிக்கு வந்துள்ளார்.

இதன்போது மாங்குளம் வீதிக்கு அருகில் இருந்த கிடங்கில் உழவு இயந்திரத்தின் முன்சில்லு தவறி விழுந்தமையால் பெட்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் பிரஸ்தாப இளைஞன் மரங்களுக்கு இடையில் சிக்குண்டு, தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்தில் மரணமானார்.

இதேவேளை மேலுமொருவர் காயம் அடைந்த நிலையில் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் அறிந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சித்திரா பௌர்ணமி தினமான நேற்றையதினம் குறித்த ஆலயத்தில் இருந்து சுமார் 25 கிலோமீற்றர் தூரம் உள்ள மம்மில் பிள்ளையார் ஆலயத்திற்கு செல்லவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-3-295-281)




## நண்பகலிலும் இ.போ.ச. சேவையை விரிவுபடுத்துக

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரிமுனைக் கிராமத்திற்கு நண்பகலில் பயணிக்கக்கூடியவாறு இ.போ.ச பேருந்து ஒன்றை சேவையிலீடுபடுத்துமாறு கௌதாரிமுனை கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிளிநொச்சியிலிருந்து மாலை 5 மணிக்கு புறப்படும் இ.போ.ச பேருந்து மறுநாட் காலை 7 மணிக்கு கிளிநொச்சியினை நோககி பயணிக்கின்றது. வேறு நேரத்தில் சேவைகள் இல்லை. இதன் காரணமாக போக்குவரத்திலீடுபடுவதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

107 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இக்கிராமத்தில் பூநகரிப் பிரதேச வைத்தியசாலை, பூநகரிப் பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம், கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஆகியவற்றிற்குச் செல்வதில் இக்கிராம மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வினாசியோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் இக்கிராமத்திலிருந்து பூநகரி நகரத்திற்கோ, கிளிநொச்சி நகரத்திற்கோ பயணிக்கமுடியாத நிலையில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் நண்பகலில் இ.போ.ச.பேருந்து ஒன்று இக்கிராமத்தினூடாக வந்து செல்லக் கூடிய வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-3)

## ஆசிரிய மாநாடு ஒரு உந்துசக்தி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆசிரிய மாநாடு நடைபெறுவது கல்வி வளர்ச்சியில் ஓர் உந்து சக்தியாக அமையுமென கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையினால் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதி தொடங்கிய ஆசிரிய மாநாட்டில் தொடக்கவுரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கூறுகையில்,

ஆசிரிய மாநாடு மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றது. முதலாவது கல்விக் கண்காட்சி, இரண்டாவது ஆசிரியர்களின் ஆய்வுரைகள், மூன்றாவது ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள். முதலில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கண்காட்சியினை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்தோம். இடைநிலை, உயர்தர மாணவர்களுக்கான கண்காட்சியினை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்தோம்.

ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் இந்த மண்ணிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்றார். (2-3)

# மன்னாரில் சிறுபோக செய்கைக்கு 13 வகை நெல்லினங்கள் பரிந்துரை

## விதைப்புத் திகதி மே 1 தொடக்கம் 21 வரை



மன்னாரில் 2016 ஆம் ஆண்டு சிறுபோகத்திற்கு 13 வகை நெல்லினங்கள் விவசாய திணைக்களம் பரிந்துரைத்துள்ளது .கடும் வறட்சி காரணமாக நீர் மட்டம் குறைந்துள்ளதால் 2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நிலையில் மன்னார் மாவட்டத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான சிறுபோக நெற்பயிர்ச்செய்கை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.


அது தொடர்பான விசேட கூட்டம் அண்மையில் உயிலங்குளம் வண்ணாமோட்டை விவசாய பயிற்சி நிலையத்தில் மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து விவசாய அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட விவசாயிகள் மற்றும் கால்நடை பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தமது தேவைகள் தொடர்பாக கலந்துரையாடியதுடன், 2016 ஆம் ஆண்டிற்கான சிறுபோகம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது .சிறுபோகம் செய்கை பண்ணப்படவுள்ள காலத்தில், கால்நடைகள் நெற்பயிர்ச்செய்கையை நாசப்படுத்தாத வண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இம்முறை சிறுபோகம், கடந்த ஆண்டு சிறுபோகத்தை பார்க்கிலும் நெற் பயிர்ச்செய்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு 3ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்பயிர்ச்செய்கை இவ்வாண்டு ஆயிரத்து 500 ஏக்கராக வீழ்ச்சி கண்டுள்ளது. கடும் வெப்பம் காரணமாக வறட்சி ஏற்பட்டு, நீர்மட்டம் குறைந்துள்ளமை இதற்கான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டது.


இதனால், கடந்த ஆண்டு கட்டுக்கரைக்குளத்தின் நீர் மட்டம் 10 அடியாக இருந்த நிலையில், இவ்வாண்டு வறட்சி காரணமாக நீர் மட்டம் 8 தொடக்கம் 7 அடியாக குறைவடைந்துள்ளது. சிறுபோக நெற்பயிர்ச்செய்கையின் விதைப்பு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 21 ஆம் திகதி வரைக்குள் விதைத்து முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், இம்முறை சறுபோக செய்கைக்கென 13 வகையான நெல்லினங்கள் செய்கை பண்ண விவசாய திணைக்களம் பரிந்துரை செய்துள்ளது. (2)






இளங்கோ அடிகவின் சிரார்த்த தினமான நேற்று வவுனியா சின்னப்புதுக்குளம் சிவன்கோவிலுக்கு அருகிலுள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தியதுடன் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். சீனிவாசனால் அன்னாரின் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)







கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளை யாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய குட்டிச் சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு அண் மையில் நடைபெற்றது.

ம.அசோக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பா ணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கலந்து கொண்டிருந்தார்.




மூளாய் ஐக்கிய இந்து இளைஞர் சனசமூக நிலைய விளையாட்டு கழகத்தினருக்கு வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் விளையாட்டு உபகர ணங்களை அண்மையில் கையளித்த போது...





கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் அதிபர் எம்.கன்கலிங்கம் அருகில் நிற்பதையும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் உரையாற்றுவதையும் திருமதி என். உதயகுமார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)






கந்தையா- கனகம்மா நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு வங்கிச் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கற்றல் உபகரணங்கள் என்பனவும் அண்மையில் வழங்கப்பட்ட போது...



நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் நூல் நிலையத்தின் 60 ஆவது ஆண்டு பவளவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் போது தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்திருந்தார். இந்நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.



நயினை மைந்தர்கள் அமைப்பின் ஊடாக 150 முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்

# வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனின் சமயப்பற்றும் ஆன்மீக உணர்வும்



சிவபதமடைந்த வைத்திய கலாநிதி இராசசிங்கம் தெய்வேந்திரனின் திடீர் மறைவு மனித குலத்திற்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாது இழப்பாகும்.

நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்

வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெறுவதற்காக செல்லும் நோயாளர்கள் எதிர்பார்க்கும் இன்முக வரவேற்பு, கனிவான பேச்சு, பரிவு, அன்பு, கருணை ஆகிய நற்பண்புகள் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு உதாரண புருஷர் அமரர் டாக்டர் தெய்வேந்திரன் ஆவார்.

தான் சார்ந்திருந்த வைத்தியத் துறையை விஞ்சும் அளவுக்கு சமயப் பற்றும் ஆன்மீக உணர்வும் அவரிடம் மேலோங்கியிருந்தமையை அவரது செயற்பாடுகள் மூலமாக உறுதிப்படுத்த முடிகிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்ற ஆரம்பித்த வேளையில் அங்கிருந்த பணியாளர்கள் அனைவருக்கும் இலவச பண்ணிசை வகுப்புக்களை தமது செலவில் ஆரம்பித்தமையை சிறியதொரு உதாரணமாகக் கொள்ளலாம்.

அன்னாரது ஆன்மீகப் பணி விரிவடைவதற்கு யாழ்ப்பாண மாநகரசபை சிறந்த தொரு தளமாக அமைந்தது.

நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் மாநகர சபையினால் வழங்கப்படும் சுகாதார சேவை, குழுநீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு சுகாதார வைத்திய அதிகாரியே பொறுப்பாக விளங்கினார்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு அத்தியாவசியமான உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாட்டினை உருவாக்கும் நோக்கில் சமய அறிவையும் இறை பக்தியையும் ஆன்மீக உணர்வையும் மேலோங்கச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு சைவசமய விவகாரக் குழுவை ஸ்தாபிப்பதில் முன்னின்றவர்களில் இவரே முதன்மையானவராவார்.

ஆரம்பம் முதல் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை அதன் தலைவராகப் பணியாற்றி சாதனைகள் பல புரிந்த பெருமைக்கு உரியவரும் இவரே ஆவார்.

இறை பணிகளுக்கு மேலாக பழைமையும்தொன்மையும்பெருமையும் மிக்க சைவசமயத்தின் விழுமியங்களை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்ட வேண்டுமென்ற உயரிய நோக்கோடு பொருள் பொதித்த மணம் பரப்பும் வருடாந்த மலர் ஒன்றினை நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலங்களில் வெளியிட வேண்டுமென்றஎண்ணம் 1993 ஆம் ஆண்டு நிறைவேறியது.

நல்லைக்குமரன் மலர் வெளிவரத் தொடங்கி தொடர்ச்சியாக 23 ஆண்டு காலம் வெளிவந்துகொண்டிருப்பது டாக்டர் தெய்வேந்திரனின் சமயப் பணிக்கு தக்கதொரு சான்றாகும்.

சமூக, மருத்துவ மற்றும் அறப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்களிடையேயிருந்த தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது அவருக்கு யாழ்.விருது வழங்கி கௌரவிக்க வேண்டுமென சைவ சமய விவகாரக் குழு 2006 ஆம் ஆண்டில் ஏகமனதாகத் தீர்மானித்ததைத் தொடர்ந்து முதல் முதலாக 2006 ஆம் ஆண்டு டாக்டர் தெய்வேந்திரன் அவர்களுக்கு யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதன் மூலம் அவரது அனைத்துப் பணிகளுக்குமான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றமை மிகப் பெரிய சாதனையாகும்.

எண்ணியது எண்ணியாங்கு
எய்தப்பெறும்
எண்ணியர் திண்ணியராகப் பெறின்

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க அமரர் தெய்வேந்திரன் அவர்கள் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த நற்பணி ஒன்று அவரது வாழ்நாளில் நிறைவெய்திமை அவரது தீர்க்க தரிசனத்திற்கு தகுந்த உதாரணமாகும்.

சுடச்சுட ஒளிரும் பொன்போல் டாக்டர் அவர்களும் ஆன்மீகத்தில் அதியுச்ச நிலையை எய்தி எம்மதமும் சம்மதம் என்ற உன்னத நிலையில் அதை தனது வாழ்நாளில் தமது குடும்பத்தினரிடையே நிகழ்த் திக்காட்டியது அவரது மனத்தூய்மைக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

அவரது பணிகள் அனைத்தும் சிறப்புற அவரது இல்லத் துணைவியாரே பக்கபலமாக விளங்கினார் என்பதை அவருடன் நெருங்கிப் பழகிய அனைவரும் நன்கறிவர்.

தேவ இந்திரனாகிய அமரர் தெய்வேந்திரன் அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் பணிகளும் நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் வெற்றிகரமாக அமைந்தமைக்கு நல்லைக் கந்தனே தோன்றாத் துணையாகி உதவினான் என அவர் அடிக்கடி கூறுவது வழக்கமாதலினாலும் அதனை நாமும் முழுமையாக நம்ப முடிகிறது.

இதற்கு ஆதாரமாக 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்று 06 மாதங் களின் பின்னர் மீளவும் யாழ்.வந்து கிடைக்கப்பெற்ற வளங்களைப் பயன் படுத்தி 1996 ஆம் ஆண்டுக்கான நல்லைக் குமரன் மலர்வெளியிடப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

அமரரின்திடீர்மறைவுஎம் அனைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மாறாத, மறக்க முடியாத சோகமாக இருந்தபோதிலும் ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை என்ற தாரக மந்திரத்தை தம் வாழ்நாளின் இறுதிவரை தளராது கடைப்பிடித்து எமக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக மிளிர்ந்த டாக்டர்தெய்வேந்திரனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

இரா.இரத்தினசிங்கம்
முன்னாள் செயலாளர்
சைவசமய விவகாரக் குழு
யாழ். மாநகராட்சி மன்றம்.

# தன்னலமற்ற சேவையாளன் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தை சொந்த வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன் அவர்கள் மனமுவந்து மக்களுக்கு மருத்துவ உயர் சேவைகளையும் பொதுச்சேவைகளையும் தன்னலம் கருதாது நீண்டகாலமாற்றியவர்.

அவர் மக்களுக்கு ஆற்றிய உயர் பணிகள் அவரை நோயாளியாக்காமல் நோயாளிகளைக் காப்பாற்றிய மறுநாளே இயற்கை எய்தியமை அவரது குடும்பத்தினருக்கும் அவரின் அறிவாற்றல்களை நன்கு திட்டமிட்டு உணர்ந்தவர்களுக்கும் மற்றும் மருத்துவ சேவைகளைப்பெற்ற, பெறுகின்றவர்களுக்கும் தாங்க முடியாத, மறக்க முடியாத அளப்பெரிய பேரிழப்பாகும்.

அன்னார் உயர்கல்வி கற்று மருத்துவராகி பல இடங்களில் மருத்துவ சேவையாற்றினாலும் பிறந்த இடமான தெல்லிப்பழையிலும் சொந்த வதிவிடத்தைச் சேர்ந்த யாழ். மாநகர சபையிலும் சுகாதார வைத்திய அதிகாரியாக தன்னலமற்ற சேவையை ஆற்றி மக்களுக்கு நோய், பிணிகளை நீக்கி மருத்துவத்துறையில் நிபுணத்துவம் பெற்றார்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அன்னார் ஓய்வு பெறாதவர்கள் போலவே யாழ்.மாநகர சபையில் மருத்துவ சேவைக்கு தொடர்ந்து அமர்த்தப்பட்டார் என்பதை வருடாந்த சம்பளப் பதிவேடுகளும் உறுதிப்படுத்துகின்றன.

அவர் தொடர்ந்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

அன்னார் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையங்களில் முதன்மை சுகாதார பயிற்சிகளை வழங்கி சுகாதாரத் தொண்டர்களை உள்ளீர்த்து தனது மருத்துவ சேவை காலத்தில் மருத்துவ சேவைக்கு தேவையான உத்தியோகத்தர்கள், ஊழியர்களை தனது பெரும் முயற்சியால் உருவாக்கி மருத்துவத் துறையை யாழ். மாவட்டத்தில் இயன்றளவு வளர்ச்சியடையச் செய்துள்ளார்.

அன்னார் எந்த விடயங்களையும் நன்கு திட்டமிட்டு ஆய்வு செய்து நடைமுறைப்படுத்துபவர். அவருடன் சேர்ந்து கடமையாற்றி வாதப் பிரதிவாதம் செய்த ஒருசிலரும் கூட காலம் கடந்தாவது அவர் எதையும் சரியாகத்தான் செய்பவர் என்ற கருத்து நிலையுடன் அவருடன் சேர்ந்து கொள்வார்கள்.

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த காலத்தில் நாட்டின் யுத்த நிலைமை காரணமாக மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது தனது ஆளுமையையும் மரியாதையையும் பயன்படுத்தி சர்வதேச சுகாதாரத் தொண்டு நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு மருத்துவப் பொருட்களையும் மற்றும் அம்புலன்ஸ் வாகனத்தையும் கொண்டு வந்து சேர்ப்பதில் அரும்பாடுபட்டவர்.

சர்வதேச பாராட்டையும் விருதுகளையும் பெற்றவராவார்.

பல்வேறு பொது அமைப்புக்களின் தலைவராகவும் ஆலோசகராகவும் இருந்து தான் எதையும் எதிர்பாராத உயர் பண்புடன் பல சேவைகளை செய்துள்ளார்.

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டையும் ஆரம்பித்து வைத்து நல்லைக் குமரனின் அருளாட்சியால் வருடந்தோறும் தொடர்கின்றது.

அவரால் உருவாக்கப்பட்ட அல்லது நேரடியாக அவரிடம் வந்து சேர்ந்த பல்வேறு உத்தியோகத்தர்களும் அவரின் அறிவாற்றல்களைப் பெற்று அவரைப்போல் வளர்ச்சியடைந்து மருத்துவ துறையையும் பொதுத் துறையையும் நன்கு தொடர்ந்து வளர்ப்பதால் அன்னாருக்கும் பெருமை சேர்க்கின்றனர்.

அத்துடன் அவரது மனைவி, மக்கள், மருமக்கள் உயர் சேவைகளைச் செய்கின்றனர்.

இவர்களும் அன்னாரைப் போல் மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்து வளர்ப்பதால் தாங்களும் உயர்வடைவதுடன் அன்னாருக்கும் பெருமை சேர்க்கும் அரும்பெரும் செயலாகும்.

புகழை விரும்பாத ஒரு தன்னலமற்ற சேவையாளன் மறைந்து இறைவனடி சேர்ந்தாலும் அன்னார் சேவை செய்த மண்ணின் மக்களின் மனங்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்ற தற்துணிவுடன் உரைக்கலாம்.


சி.ஆ.ஏகானந்தசிவம்
வேலணைப் பிரதேச சபை,
யாழ்.மாநகர சபை,
யாழ்.பி.சு.சே.பணிமனை
ஓய்வுநிலை
முகாமைத்துவ உதவியாளர்



யாழ்.மணற்காடு றோ.க.த.க. பாடசாலைக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள இரண்டு கட்டடங்களிற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.திரவியராசா, பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் திருமதி தர்மராசா, மணற்காடு மதகுரு யூக் வின்சனிற் அடிகளார், பாடசாலை அதிபர் எஸ்.வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண

# இந்தியா, சீனாவுக்கு இடையே அமைதி வழியில் ஒப்பந்தம்!



(பீஜிங்)

**இந்தியா-சீனா இடையே இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரஸ்பரம் அமைதியான முறையில் எல்லைப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்தியா-சீனா இடையே பல ஆண்டுகளாக எல்லை பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இது தொடர்பாக இந்திய - சீன சிறப்பு பிரதிநிதிகள் இடையே இதுவரை 18 சுற்று பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை. அவ்வப்போது சீன இராணுவத்தினர் இந்திய எல்லைகுள் அத்துமீறி ஊடுருவி முகாம்கள் அமைப்பது போன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

இந்நிலையில் இந்திய-சீன எல்லை பிரச்சினை குறித்த 19 ஆவது சுற்று பேச்சுவார்த்தை விரைவில் நடக்கவுள்ளது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால், சீன தேசிய பாதுகாப்பு ஆலோசகர் யங் ஜெய்ச்சியை நேற்று முன்தினம் சீனாவில் சந்தித்து பேசினார். அப்போது எல்லை பிரச்சினைக்கு பரஸ்பரம், அமைதியான முறையில் தீர்வு காண்பது, இரு நாடுகள் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, பாகிஸ்தான் பயங்கரவாதியான மசூத் அசார் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் எல்லை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## நிலநடுக்கத்துக்குப் பின்னர் 1700 பேரைக் காணவில்லை

### 525 சடலங்கள் இதுவரை மீட்பு



ஈக்வடோரில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்குப் பிறகு சுமார் 1,700 பேரைக் காணவில்லை என்றும் இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி நள்ளிரவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவானது. இதன் காரணமாக, பெடர்னலெஸ் மற்றும் மன்ட்டா உள்ளிட்ட கடற்கரை நகரங்களில் பல்வேறு கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின.

இந்த இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவமும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மீட்புக் குழுவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மீட்புப் பணியில் மோப்ப நாய்கள் மற்றும் இராட்சத இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகன்றன. இதுவரை 525 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 4,605 பேரை காயங்களுடன் மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்துள்ளனர். எனினும், மேலும் பலரைக் காணவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அவர்களின் உறவினர்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். (இ-5)

## பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும்

### ஐ.நா.வில் ஜெட்லி வலியுறுத்து

(நியூயோர்க்)

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாத கட்டமைப்புக்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை, சர்வதேச சமுதாயம் தீவிரப்படுத்த வேண்டும் என, மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா., பொதுக்குழு சிறப்புக் கூட்டத்தில் நேற்று முன்தினம் (ஏப்.,20), நிதியமைச்சர் அருண் ஜெட்லி பேசியதாவது, நாகரிக சமுதாயங்களுக்கு, பயங்கரவாதத்தால், பெரியளவில் அச்சுறுத்தல் உள்ளது.

பயங்கரவாதத்துக்கு எல்லை கிடையாது. உலகின் பல்வேறு நாடுகளில், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி அப்பாவிகளை கொன்று வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையேயான உறவு அதிகரித்து வருவது, உலகளவில் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு ஆபத்து விளைவிக்கும்.

இதற்கு எதிரான, உலகளாவிய நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும். இவ்வாறு அருண் ஜெட்லி மேலும் தெரிவித்தார். (இ-5)

## இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராக யுனெஸ்கோவில் கடும் தீர்மானம்



ஜெரூசலேம் அல் அக்ஸா வளாகம் மற்றும் ஹெப்ரூன், பெத்லஹேமில் இருக்கும் புனிதத் தலங்கள் 'பாலஸ்தீனத்தின் ஒருங்கிணைந்த பகுதிகள்' என்றும் இஸ்ரேல் நிர்வாகம் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுவதாகவும் ஐ.நாவின் கலாசார நிறுவனமான யுனெஸ்கோ தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

அத்துடன் முஸ்லிம் அடக்கஸ் தலங்களில் இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பு அதிகாரத்தைக் கொண்டு போலியான கல்லறைகளை புதைப்பதாகவும் யுனெஸ்கோ கண்டித்துள்ளது.

பழைய நகரின் இதயப்பகுதியில் இருக்கும் இப்ராஹிமி பள்ளிவாசல் மற்றும் பெத்லஹேமின் பிலால் பின் ரபாஹ் பள்ளிவாசல் ஆகியன பாலஸ்தீன தலங்கள் என்றும் யுனெஸ்கோ பத்திரம் குறிப்பிட்டுள்ளது. ஆக்கிரமிப்பு பாலஸ்தீன பகுதிகள் மீதான இந்த தீர்மானம் யுனெஸ்கோ நிறைவேற்று சபையால் ஏப்ரல் 11 இல் வெளியிடப்பட்டுள்ளது.

ஹெப்ரூன் மற்றும் பெத்லஹேமில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் கட்டுமானங்கள், வீதி அமைப்புகள், குடியேற்றங்கள் மற்றும் மதில்கள் போன்ற விரிவாக்கப் பணிகள் உடன் நிறுத்தப்பட வேணடும் என்றும் யுனெஸ்கோ அழுத்தம் கொடுத்துள்ளது.

எனினும் இந்த தீர்மானத்தை கடுமையாக கண்டித்திருக்கும் இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, ஐ.நாவின் மற்றொரு அபத்தமான தீர்மானம் என்று விமர்சித்துள்ளார். (இ-5)

# கொலை செய்ய முயற்சி

## இலங்கைக் கடற்படையினர் மீது இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டு

(டில்லி)

**இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் துப்பாக்கி மற்றும் இரும்புக்கம்பிகளால் தாக்கியபின் டீசல் மற்றும் பெற்றோலை மீனவர்கள் மீது ஊற்றி கொலை செய்ய முயற்ச்சித்ததாக இந்திய மீனவர்கள் இந்திய ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் காலை பாம்பன் வடக்கு கடல் பகுதியிலிருந்து 200 இற்கும் மேற்பட்ட நாட்டு படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். பாம்பனிலிருந்து 10 கடல்மைல் தொலைவில் இந்திய கடல் எல்லையில் மாலை 5 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் வாட்டர் ஸ்கூட்டர் விரைவு ரோந்துப் படகு மற்றும் அதிநவீன விரைவுப் படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் 100 இற்கும் மேற்பட்ட மீனவர்களை படகுகளுடன் சுற்றிவளைத்தனர்.

பின் துப்பாக்கி மற்றும் இரும்புக் கம்பிகளால் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் படகிலிருந்த ஐஸ்பெட்டி, மீன்பிடி வலைகள், திசைகாட்டும் கருவிகள் உள்ளிட்ட பல இலட்சம் மதிப்பிலான பொருட்களை சேதப்படுத்தியதோடு மீனவர்களை வைத்து சித்திரவதை செய்ததோடு 50 இற்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த பல இலட்சம் மதிப்பிலான மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி கருவிகளை சேதப்படுத்தி கடலில் வீசி எறிந்தனர்.

மேலும் பாக்கியம் என்பவரது படகில் சென்ற ஜெரோன், சந்தியா, பிராங்கிலின், அடைக்கலம் சேசு உள்ளிட்ட மீனவர்கள் மீது டீசல் மற்றும்பெற்றோலை ஊற்றி கொலை முயற்சியில் ஈடுபட முயன்ற போது உயர் அதிகாரிகளின் உத்தரவையடுத்து எங்களை விடுவித்ததாக கரை திரும்பிய மீனவர்கள தெரிவித்துள்ளனர்.

மேலும் இனி இங்கு நின்றால் படகுடன் உங்களையும் தீவைத்து கொளுத்துவோம் என மிரட்டியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வளவு சம்பவங்கள் நடைபெற்ற நிலையில் இந்திய கடற்படையோ அல்லது கடலோர காவல் படையினரோ கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வரவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர் (இ-9)




---

விஜய் மல்லையா நிறுவனத்துக்கு

## குறைந்த விலையில் அரசு நிலம் விற்பனை

**தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கண்டுபிடிப்பு**



கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் கஞ்சிக்கோட்டில் அரசுக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலத்தை விஜய் மல்லையாவுக்கு சொந்தமான நிறுவனத்துக்கு குறைந்த விலைக்கு விற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகயுள்ளன.

தகவல் அறியும் உரிமை சட்டத்தில் அதே பகுதியை சேர்ந்த ஒருவர் நிலம் விற்பனை மற்றும் நில மதிப்பு குறித்து தகவல் கேட்டார். கஞ்சிக்கோடு பகுதியில் பியர் தொழிற்சாலை அமைக்க கடந்த 2013 ஆம் ஆண்டு 20 ஏக்கர் நிலத்தை செண்ட் ரூ.70 ஆயிரம் என்ற வீதம் கணக்கிட்டு 14 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது.

நிலவழிகாட்டு மதிப்புப்படி செண்ட் ரூ.3 இலட்சத்திற்கு விற்பனை செய்திருக்க வேண்டும். ஆனால் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டதால் அரசுக்கு ரூ.50 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்தன.

இதுகுறித்து பாலக்காடு ஆட்சியர் மேரிகுட்டியிடம் கேட்ட போது, மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியாமல் யுனெடெட் பிரீவரீஸ் நிறுவனத்துக்கு நிலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்துக்கு அரசு நிலம் பதிவு செய்து வழங்கியது குறித்து தனக்கு தெரியாது. செய்தியின் அடிப்படையில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

கேரளாவில் உம்மன் சாண்டி தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. அரசின் பதவிக்காலம் முடிந்து சட்டசபை தேர்தலை சந்திக்கும் இந்த நிலையில் இந்த பிரச்சினை கேரளாவில் பெரும் புயலை கிளப்பியுள்ளது. (இ-5)

---

## காஷ்மீரில் துப்பாக்கிச் சண்டை; 2தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தில் உள்ள லோலாப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கி சண்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தில் உள்ள லோலாப் பகுதியில் இருக்கும் புட்ஸ்கை என்ற இடத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்த பகுதியை இராணுவ வீரர்களும், உள்ளூர் பொலிஸாரும் நேற்று முன்தினம் இணைந்து முற்றுகையிட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தினார்கள்.

நேற்று அதிகாலை ஒரு பகுதியில் சில தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதை பாதுகாப்பு படையினர் கண்டுபிடித்தனர்.. அவர்களை இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர்.

அப்போது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டபடி தப்பிச் செல்ல முயன்றனர். இதையடுத்து இராணுவ வீரர்களும் எதிர் தாக்குதல் நடத்தினார்கள். இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இந்தச் சண்டையில் அடுத்தடுத்து 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களது உடலை ஆய்வு செய்த இராணுவத்தினர் 2 தீவிரவாதிகளும் பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை கண்டுபிடித்தனர்.

இதற்கிடையே அந்த பகுதியில் மேலும் சில தீவிரவாதிகள் பதுங்கி இருப்பது தெரிந்தது. இவர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கி சண்டை நடந்து வருகிறது. (இ-5)

---

## ஜெயாவின் கூட்டத்தில் பங்கேற்ற 2 பேர் மயங்கி விழுந்து மரணம்

**4 பேருக்கு காயம்**

சேலத்தில் நேற்று முன்தினம் நடந்த ஜெயலலிதா பிரசார பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற அ.தி.மு.க. தொண்டர்கள் 2 பேர் கடும் வெயிலால் பாதிக்கப்பட்டு மயங்கி விழுந்து உயிரிழந்தனர். மேலும் பெண் பொலிஸ் உள்ளிட்ட 3 பேர் மயக்கமடைந்தனர்.

சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை உள்ளிட்ட 7 மாவட்டங்களைச் சேர்ந்த அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து சேலம் மகுடஞ்சாவடி அடுத்த கூத்தாடிபாளையத்தில் முதல்வர் ஜெயலலிதா பங்கேற்ற பொதுக்கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் பங்கேற்க நூற்றுக் கணக்கான லொறிகளில் அ.தி.மு.க. தொண்டர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். முற்பகல் 11 மணி முதலே பொதுக்கூட்ட திடலில் தொண்டர்கள் திரண்டனர்.

சேலத்தில் வெயில் நேற்று முன்தினம் 107.3 டிகிரியாக இருந்தது. இதனால், பொதுக்கூட்டத் திடலில் சிக்கிய தொண்டர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். மேலும் குடிநீர் வசதி இல்லாததால் பெரும் பரிதவிப்புக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த சேலம் மாவட்டம் கடம்பூரைச் சேர்ந்த பெரியசாமி (வயது-65) என்பவர் வெயிலால் விழுந்து சம்பவ இடத்திலும், பச்சியண்ணன் என்பவரும் உயிரிழுந்தனர். மேலும் அய்யண்ணன் (வயது-55), நீலாவதி (வயது-53), பாதுகாப்பு பணிக்கு வந்திருந்த பொள்ளாச்சியைச் சேர்ந்த (பொலிஸ்) கற்பகம் ஆகியோர் மயங்கி விழுந்தனர். இவர்கள் அனைவரும் அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (இ-5)



# முன்னாள் பிரதமர் பல லட்சம் ஹில்டன் ஹோட்டலுக்கு நிலுவை

கடந்த 2014 ஆம் ஆண்டின் இறுதி ஐந்து மாத காலப்பகுதியில் முன்னாள் பிரதமருக்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் விசும்பாயவுக்கு வழங்கப்பட்ட மதுபானம் மற்றும் உணவு என்பவற்றுக்கான கட்டணமான 40 இலட்சம் ரூபாவை இதுவரை கொழும்பு ஹில்டன் ரெஸிடென்ஸ் ஹோட்டலுக்கு வழங்காதிருப்பதாக குறித்த நிறுவனம் பிரதமர் செயலகத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இது பிரதமர் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ள இரண்டாவது கடிதம் எனவும் ஹில்டன நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. உணவு, மதுபானங்களுக்கான பற்றுச் சீட்டுக்களுடன் இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.

பிரதமரின் மக்கள் தொடர்புச் செயலாளர் கே.ஏ. தர்மசேன, தனிப்பட்ட உதவிச் செயலாளர் ஷிராஸ் மொஹமட், சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.எச். ஜீ. பண்டார ஆகியயோரின் வேண்டுகோளின் பேரில் பிரதமர் அலுவலகத்துக்கு இந்த பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கடந்த 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி விசும்பாயவுக்கு வருகை தந்த கியூபா பிரமுகர்கள் 15 பேருக்கான தேனீர் விருந்துக்கான கட்டணமாக 3 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பணம் ஹோட்டலுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளதாக ஹோடடல் முகாமை மேலும் கூறியுள்ளது.

இதுபோன்று பல நிகழ்வுகளுக்கு கடந்த அரசாங்க காலத்தில் ஹோட்டலுக்கு கட்டணம் வழங்கப்படாதுள்ளமையை எடுத்துக் காட்டி பிரதமர் செயலகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், புதிய அரசாங்கம் மாறியதனால் இதனைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் ஹோட்டல் நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-5)

# ரூ.40 இலட்சம் பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது

சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட 40 இலட்சம் ரூபா பெறுமதியான 8 தங்க பிஸ்கட்டுக்களுடன் கட்டு நாயக்க விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை 9.45 மணிக்கு சிங்கப்பூரிலிருந்து இலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானத்திலேயே குறித்த சந்தேக நபர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் கொழும்பை வதிவிடமாகக் கொண்ட 45 வயதுடையவர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபருக்கு ரூ 1 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 80 | 100 |
| தக்காளி | 100 | 70 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 45 | 50 | 80 | 50 |
| கோவா | 100 | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 120 | 90 | 100 | 120 | 100 |
| பூசணி | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 30 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 90 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 180 | 90 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 250 | 200 | 140 | 160 | 150 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 100 | 60 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 120 | 40 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 250 | 100 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 25 | — | 50 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-40 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 160 | 100 | 140 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 30 | — | 120 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை ஜனாதிபதி பிரேமதாச படுகொலை 162

**உறவினர்**

இறந்து போன கிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் நெருங்கிய உறவினர் ஆவார்.

கிட்டுவுக்கு வயது 36. மென்மையாகப் பேசும் இயல்புடைய கிட்டு விடுதலைப் புலிகளின் மிதவாதி என்று கருதப்பட்டார்.

இங்கிலாந்தில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதும் அவர் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். பிறகு சுவிஸ் நாட்டில் தங்கி இருந்தார். பின்னர் இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் தங்கி இருந்தார். கிட்டுவின் மரணம் பிரபாகரனுக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

தனக்கு அடுத்த துணைத் தளபதியாகக் கிட்டுவை நியமிக்க பிரபாகரன் திட்டமிட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் திரும்பியதும் துணைத் தளபதி பொறுப்பை ஏற்க இருந்தார். இதற்காக அவரை ஐரோப்பாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பும்படி பிரபாகரன் அழைத்திருந்தார்.

பேச்சுவார்த்தை நடத்துவதில் வல்லவரான கிட்டுவுக்கு சிங்கள இராணுவ அதிகாரிகளுடன் நெருக்கம் இருந்தது.

எனவே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நிலைமை ஏற்பட்டால் அப்போது கிட்டுவின் சேவை தேவைப்படும் என்று தலைமை கருதியது.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுத தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதைச் சமாளிப்பதற்காக கிட்டு ஆயுதங்களுடன் கப்பலில் புறப்பட்டார்.

**மாத்தையா வரவில்லை**

கிட்டுவின் மரணத்துக்கு ஜனவரி 18 ஆம் திகதி தொடங்கி 3 நாட்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் சார்பில் யாழ்ப்பாணத்தில் துக்கம் கடைப் பிடிக்கப்பட்டது. அங்கு ஏற்பாடு செய்திருந்த நினைவு நிகழ்ச்சியில் மாத்தையா பங்கேற்கவில்லை.

மேதின ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்ற போது வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு சைக்கிளில் வந்த மர்ம மனிதன் குண்டை வெடிக்கச் செய்தான்.

இதில் ஜனாதிபதி பிரேமதாச அந்த இடத்திலேயே உடல் சிதறி மரணம் அடைந்தார்.

மே தினத்தை முன்னிட்டு ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி கொழும்பு நகரில் ஒரு ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த ஊர்வலத்துக்கு ஜனாதிபதி பிரேமதாச தலைமை தாங்கி ஒரு ஜீப்பில் சென்றார்.



நகரின் மையப்பகுதியான ஆர்மர் தெருவில் பகல் 12.45 மணி அளவில் ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

**குண்டு வெடித்தது**

அப்போது உடலில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு சைக்கிளில் வந்த ஒரு மர்ம மனிதன் பிரேமதாசவின் ஜீப் மீது மோதுவதற்காக நெருங்கினான். பாதுகாப்புப் படையினர் அவனைத் தடுத்து நிறுத்திய போது அவன் தன் உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த குண்டை வெடிக்கச் செய்தான்.

**பிரேமதாச மரணம்**

குண்டு வெடிப்பில் சிக்கிப் பிரேமதாச உடல் சின்னா பின்னமாகி மரணம் அடைந்தார். குண்டை வெடிக்கச் செய்த மர்ம மனிதனும் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உடல் சிதைந்து இறந்தான்.

குண்டு வெடிப்பில் பிரேமதாசவின் மெய்க் காவலர்கள் 6 பேர் உட்பட 40 இற்கும் அதிக மானவர்கள் பலியானார்கள். அதில் 17 பேர் உடல்கள் அடையாளம் தெரியாத அளவுக்குச் சிதறிப் போய்விட்டன. 60 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குண்டு வெடிப்பில் பிரேமதாச காயத்துடன் தப்பி விட்டதாக முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன. ஆனால் அவர் என்ன ஆனார் என்று அரை மணி நேரம் குழப்பம் நிலவியது. பிறகு அவரது உடல் சின்னா பின்னமாகச் சிதறிப்போய் விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

**மாறுபட்ட தகவல்கள்**

குண்டு வெடித்த மர்ம மனிதன் மோட்டார் 'சைக்கிளில் வந்தான் என்றும் நடந்து போய் பிரமதாசவை நெருங்கினான் என்றும் மாறுபட்ட தகவல்கள் தெரிவித்தன.

குண்டு வெடித்த ஆர்மர் தெரு ஒரே ரத்த களரியாகக் காட்சி அளித்தது. எங்கு பார்த்தாலும் பீறிட்டு அடித்த ரத்தமும் மனித தசைகளுமாகக் காணப்பட்டன.

பிரேமதாசவுக்குப் பின்னால் கார்களில் வந்து கொண்டிருந்த அமைச்சர்கள் உயிர் தப்பினார்கள்.


**ஊர் அடங்குச் சட்டம்**

பிரேமதாசவின் மரண செய்தியை தொலைக் காட்சியான ரூபவாஹினி அறிவிக்கும் முன்னதாக இலங்கை முழுவதும் ஊர் அடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு பிரேமதாச படுகொலை செய்தி சொல்லப்பட்டது.

கொழும்பு நகரின் முக்கிய இடங்களில் இராணுவம் நிறுத்தப்பட்டது. தெருக்களில் பாதுகாப்புப் படையினர் ரோந்து சுத்தத் தொடங்கினார்கள்.



மே தின விழா அணிவகுப்பைப் பார்வையிட வரும் பிரேமதாசா.



(தொடரும்)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒருபோதும் நீக்கப்படாது

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒருபோதும் நீக்கப்படாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நீக்கப்பட வேணடுமாயின், அதற்கு நிகரான அல்லது நாட்டைப் பாதுகாக்கக்கூடிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறான புதிய பலமான சட்டம் ஒன்று உருவாக்கப்படும் வரை பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட மாட்டாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதியமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு இணைந்து புதிய சட்டமொன்றை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. அதன் முதற்கட்ட வரைபுப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

இந்நிலையில், பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான நிபுணத்துவப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகளுடைய ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த போதிலும் பொருளாதார, தொழில்நுட்ப ரீதியாக பயங்கரவாதம், சர்வதேசத்தின் மத்தியில் தலையெடுத்துள்ளன.

இதேவேளை, சாதாரண சட்டமொன்றை உருவாக்கி, நாடாளுமன்ற அனுமதியுடன் அமுலாக்க 8 மாதங்கள் வரை செல்லும்.

நாட்டின் பாதுகாப்புக்கான பாரிய சட்டத்தை உருவாக்க நீண்ட காலம் எடுக்கும். எனவே அவசரமாக அரைகுறையான சட்டத்தை உருவாக்க முடியாது.

இதேவேளை, விரைவாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்த வந்தாலும் வராவிட்டாலும் மே தினத்தைக் கொண்டாடுவோம்

(கொழும்பு)

மகிந்த வந்தாலும், வராவிட்டாலும் காலியில் மேதினம் கொண்டாடப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த மே தினமானது காலி நகரின் பொது விளையாட்டரங்கில் ஜனாதிபதி ம்மைத்திரிபால தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மேதின நிகழ்விற்காக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க,மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த மேதின நிகழ்விற்கு த்னக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என கடந்த வாரம் மகிந்த ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவே துமிந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் காலியில் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அதில் கலந்து கொள்ளாமல்வேறொரு மேதினக் கூட்டத்தில் கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை



எடுக்கப்படும் எனவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# அனுமதியின்றி மதுப்போத்தல்களை ஏற்றிச் சென்ற இருவர் கைதாகினர்



(கொழும்பு)

பொகவந்தலாவ கொடடியாகலை கீழ் பிரிவு தோட்ட பகுதிக்கு விற்பனை செய்வதற்காக 100 மதுபான போத்தல்களை கொண்டு சென்ற இருவர் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று போயாதினம் என்பதால் மதுபான கடைகள் மூடப்படும்.

ஆகவே இரவு விற்பனைக்காக கொண்டு சென்ற போது ஆட்டோச் சாரதியும் மதுபான போத்தல்களுக்கான உரிமையாளரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு ஆட்டோ ஒன்றையும் பொகவந்தலாவ பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மேலும் நேற்று முன்தினம் பொகவந்தலாவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொணடு வருகின்றனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### என்னிடம் என்ன குறை?

நமக்கு மிகவும் வேண்டியவர்களே நம்மைப் பற்றி நம் முதுகிற்குப் பின்னால் கூறும் குறைகளைக் கேள்விப்படும் போது கோபமும் வருத்தமும் ஒருங்கே ஏற்படுகின்றன.

மூன்றாவது மனிதர் மூலமாக இந்தச் செய்தி நம் காதை எட்டும் போது இதைப் பரப்பக் காரணமாய் இருந்த நபர் நம்மிடம் நேரிடையாகவே சொல்லியிருக்கலாமே இப்படிப் பலரும் அறியும் வகையில் கேவலப்படுத்தி விட்டாரே,இவரா? நமக்கு வேண்டியவர் இல்லை!இவர் நம் எதிரி எனக் குமுறுகிறோம்.

இதைக் கேள்விப்பட்டு அதே மனிதர் வேறு ஒரு குற்றச்சாட்டை நம்மிடம் நேரிடையாகக் கூறும் பொழுது நீங்கள் என்ன ரொம்ப யோக்கியமா?நீங்கள் ரொம்ப ஒழுங்கா? எனத் திசையை திருப்புகிறோம்.

ஆக இப்படிச் சொன்னால் அப்படியும் , அப்படிச் சொன்னால் இப்படியும் புரட்டுகிறோமே தவிர நம்மிடம் சில குறைகள் உள்ளன. அவற்றை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் சிந்திப்பதில்லை. அல்லது சிந்திப்பவர்கள் குறைவு.

மனிதர்களிடம் குறைபாடுகள் இருப்பது வெறுக்கத்தக்க அம்சமல்ல .ஆனால் அதை உணரக் கூட மறுக்கிறார்களே அதுவே மாபெரும் குறை.

இயல்பாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஏற்கத் துணியாத மனநிலை ஒரு புறம் இருக்க வலியப் போய் என்னிடம் நீங்கள் என்ன குறைகளைக் காண்கிறீர்கள் என ஒருவர் கேட்க வேண்டும் என்கிறேன் நான்.

மேற் கூறிய கேள்வியை முன் பின் அறிமுகமாகாதவரிடமோ முற்றிலும் பழக்கமில்லாதவர்களிடமோ கேட்கச் சொல்லவில்லை. பற்றுக் கொண்டவர்களிடமும் ெநருங்கிய நட்புக் கொண்டவர்களிடமும் நேசமுள்ளவர்களிடமும் கேளுங்கள். இந்தக் கேள்வியை எல்லா நேரத்திலும் கேட்டு விட முடியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்குரிய மனப்பக்குவம் இருக்கும் நேரத்தில் கேட்டால் போதுமானது.

இந்தக் கேள்வியை நம் மனச்சாட்சியிடம் கூடக் கேட்கலாம். ஆனால் அந்த மனச்சாட்சி கூட சுற்றுப்புறச் சூழ்நிலைகளால் கறைபட்டுப் போய் இருக்க வாய்ப்புண்டு. எனவே நம்மை விட நம்மை சுற்றியவர்களே நம் குறைகளை நன்கு உணர்ந்து வைத்திருக்கிறார்கள்.

மேற்கூறிய நபர்கள் நம் மேன்மையையும் சிறப்பையும் விரும்புபவர்கள்;வாழ்வில் நாம் உயர வேண்டும் என்ற வேட்கையை உடையவர்கள்.

இப்படி நாம் அவர்களைக் கேட்டு விட்டால் அவர்கள் நம்மைப் பற்றிப் பிரசாரம் செய்வதை விட்டுவிட்டு மிக இதமாகவும் நம் மனம் புண்படத வகையிலும் எடுத்துச் சொல்வார்கள்.

இதன் மூலம் நம் குறைபாடுகள் பலருக்குத் தெரிவதையும் நம்மனம் வருத்தப்படுவதையும் நாம் தவிர்க்க முடிகிறதல்லவா?

கேட்டதோடு நின்று விடாமல்,இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிடாமல், அவற்றை ஒவ்வொன்றாகக் களையவும் நாம் முன்வந்தால் நமக்கு – உயர்வும் நற்பெயரும் உறுதியாகக் கிடைக்கும்.

லேனா தமிழ்வாணன்




# மாயாண்டி!



பத்தமடை என்னும் கிராமத்தில் மாயாண்டி என்பவன் இருந்தான். அவனிடம் நிறைய ஆடுகள் இருந்தன. அவன் தினமும் பக்கத்திலுள்ள காட்டுக்கு தன் ஆடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வான். அன்றும் வழக்கம் போல ஆடுகளை மேய விட்டு, ஒரு மரத்தடி நிழலில் ஓய்வெடுத்தான்.

வேட்டைக்கு வந்த ஒரு அரசர் தாகத்தினால் தவித்து தண்ணீர் தேடி அலைந்து அங்கே வந்தார். மரத்தடியிலிருந்த மாயாண்டியை கண்டார்.

"உங்களிடம் தண்ணீர் இருக்கிறதா?" என்றான் அரசர்.

"என்னிடமும் தண்ணீர் இல்லை!" என்றான் மாயாண்டி.

தண்ணீர் இல்லாதால் அரசர் தவித்தார்.

அரசனின் தவிப்பு மாயாண்டிக்கு தெரிந்தது. எனவே, உதவ முன்வந்தான் மாயாண்டி.

"அரசே சற்று பொறுங்கள்!" என்று கூறிவிட்டு ஒரு பூவரசு இலையைப் பறித்து கூம்புபோல் சுருட்டி அடிப்பகுதியை இலேசாக மடித்துவிட்டான். குட்டி போட்ட ஓர் ஆட்டின் காம்புகளிலிருந்து பால் கறந்து கொடுத்தான்.

அரசனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. பாலைக் குடித்தார். அரசரின் தாகம் தீர்ந்தது.

பின்பு அரசர், அதே பூவரசு இலையில் கீழே கிடந்த ஒரு முள்ளால் இரண்டு கிராமங்களை தருவதாக மெல்ல, மெல்ல அதில் எழுதினார் அரசர்:

"நாளைக்கு அரண்மனையில் கொண்டு வந்து கொடு... பத்திரம் எழுதி தருவார்கள்," என்று அந்த இலையை விவசாயிடம் கொடுத்தார் அரசர்.

அரசரை ஆச்சரியத்துடன் வணங்கினான் மாயாண்டி. பின்பு அரசர் குதிரை மீதேறி சென்று விட்டார்.

மாயாண்டியோ தன் மனசெல்லாம் மகிழ்ச்சியுடன் கனவு காண ஆரம்பித்து விட்டான். இலையைக் கையில் பிடித்தபடியே ஒரு மர நிழலில் அப்படியே உறங்கிப் போனான். அப்போது ஒரு ஆடு வந்து அவன கையிலிருந்த இலையை பிடுங்கி தின்றுவிட்டது.

கண்விழித்த மாயாண்டி அதிர்ச்சி அடைந்தான். "எனது கவனக்குறைவால் நான் இரண்டு கிராமங்களை இழந்து விட்டேனே.." என்று அழுதான்.

குட்டீஸ் நீங்களும் இவரைப் போல இருக்காதீங்க. கிடைக்கும் சந்தர்ப்பத்தை வைத்து முன்னேற முயற்சி செய்யுங்க!




- 1500 - பிரேசிலைக் கண்ட முதல் ஐரோப்பியர் போரத்துக்கீசரான பேதுரோ கப்ரால்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெஞ்சமின் கிரியெர்சன் தலைமையில் நடு மிசிசிப்பியைத் தாக்கினர்.
- 1889 - நடுப் பகலில் பல்லாயிரக் கணக்கானோர் காணிகளைக் கைப்பற்றுவதற்காக ஓடினார்கள்..சில மணி நேரங்களில் ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா நகரம் மற்றும் கத்ரி (Guthrie) ஆகியவற்றில் 10,000 பேர் அங்கிருந்த வெற்றுக் காணிகளைக் கைப்பற்றிக் குடியேறினர்.
- 1898 - அமெரிக்க கடற்படையினர் கியூபாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டு ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.
- 1912 - ரஷ்யாவின் பொதுவுடமைக் கட்சியின் பத்திரிகை ப்ராவ்டா சென் பீட்டர்ஸ்பேர்கிலிருந்து வெளிவர ஆரம்பித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஈப்ர (Ypres) ஜேர்மனி முதன் முதலாக குளோரீன் வாயுவை வேதியியல் ஆயுதமாகப் பாவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் நியூ கினியின் ஒல்லாந்தியா என்ற இடத்தில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: குரோவேசியாவில் ஜசெனோவாச் வதைமுகாம் கைதிகள் சிறையுடைப்பில் ஈடுபட்டபோது 520 கைதிகள் கொல்லப்பட்டனர். 80 பேர் தப்பியோடினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் பெர்லினில் எபெர்ஸ்வால்ட் நகரை இலகுவாகக் கைப்பற்றியதைக் கேள்வியுற்ற ஹிட்லர தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.
- 1970 - முதலாவது பூமிதினம் கொண்டாடப்பட்டது.
- 1983 - ஹிட்லரின் நாட்குறிப்புகள் கிழக்கு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டதாக டேர் ஸடேர்ன் என்ற ஜேர்மனிய இதழ் அறிவித்தது.
- 1997 - அல்ஜீரியாவில் கெமிஸ்ரி என்ற இடத்தில் 93 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1997 - பெருவின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் 126 நாட்களாகப் பணயக கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த 71 பேர் அரசுப் படைகளின் தாக்குதலின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
- 2000 - ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.
- 2006 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- 1724 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த தத்துவவியலாளர் (இ. 1804)
- **1870 - விளாடிமிர் லெனின், ரஷ்யப் புரட்சியாளர், லெனினிசம் என்ற கோட்பாட்டின நிறுவுனர (இ. 1924)**
- 1876 - ரொபேர்ட் பாரானி, நோபல் பரிசு பெற்ற அமெ ரிக்கர் (இ. 1936)
- 1909 - ரீட்டா லெவி-மொண்டால்சினி, நோபல் பரிசுபெற்ற இத்தாலியர்
- 1919 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 2001)
- 1940 - க. சட்டநாதன், ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர்

**இறப்புகள்**

- 1994 - ரிச்சார்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்காவின 37 ஆவது ஜனாதிபதி (பி. 1913)
- 2013 - லால்குடி ஜெயராமன் வயலின் மேதை (பி.1930)

**சிறப்பு நாள்**

- பூமிதினம்

**புவி தினம்**




1969இல் ரான் காப் உருவாக்கிய சுற்றுச் சூழல் குறியீடு: "Environment" மற்றும் "Organism" என்கிற ஆங்கில வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்ட "E" மற்றும் "O" எழுத்துக்களின் ஒருங்கிணைப்புபுவி நாள் (Earth Day) என்பது ஆண்டுதோறும் ஏப்ரல் 22ம் நாளன்று புவியின் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அச் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக் கோடு அனைத்து நாடுகளிலும் 1970ஆம் ஆண்டு முதல் கடைபபிடிக்கப்பட்டுவரும் ஒரு சிறப்பு நாளாகும்.

1969 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் யுனெஸ்கோ மாநாடு ஒன்று நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுள் ஒருவர் ஜான் மெக்கானெல் (John Mc Connell). அவர் உலக அமைதிக்காகக் குரல்கொடுத்த ஒரு மாமனித்ர். மனிதரும் பிற உயிரினங்களும் வாழ்கின்ற பூமியின் அழகைச் சிறப்பிக்கவும், பூமியின் இயற்கைச் சூழலைக் குலைத்து மாசுபடுத்தாமல் காக்கவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தேவை என்று அவர் வலியுறுத்தினார். அதோடு, ஆண்டுதோறும் புவி நாள் என்றொரு நாளைக் கொண்டாடுவது பொருத்தம் என்றும் மெக்கானெல் கருத்துத் தெரிவித்தார். இவ்வாறு புவி நாள் என்னும் பெயரும் கருத்தும் எழுந்ததாகக் கருதப்படுகிறது.

அதே சமயத்தில், ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுச்சூழலியல் நிபுணரும் மேலவை உறுப்பினருமான கேலார்ட் நெல்சன் என்பவர் சுற்றுச் சூழல் பற்றிய அறிவைப் பரப்பத் தகுந்த நாளாக 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 நடத்த அழைப்பு விடுத்தார். இந்த நாளின்போது புவியின் வடகோளப் பகுதி வசந்த காலமாகவும், தென்கோளப் பகுதி இலையுதிர் காலமாகவும் காணப்படுகிறது.

அவரது அழைப்பை ஏற்று 20 மில்லியன் மக்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்தார்கள். அன்றிலிருந்து ஆண்டுதோறும் இந்நாள் 175 நாடுகளில் (புவி பூமி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் அவை ஜூன் 5 ஆம் நாளன்று உலக சுற்றுச் சூழல் நாளை அனுசரித்து வருகிறது.

# அரசாங்கம் மிகக்குறுகிய காலத்திற்குள் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளது

## கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பதவியில் இருக்கும் தேசிய அரசாங்கம் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக பொதுமக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளதாக ஜே.வி.பி. தொழிற்சங்கத் தலைவர் கே.டி. லால்காந்த விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், இந்த அரசாங்கத்தில் எந்தவொரு தீர்மானத்தை எடுப்பதாயினும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் கலந்தாலோசித்த பின்னரே எடுக்கின்றார்கள்.

ஆனால் அது குறித்து பொது மக்கள் எதிர்ப்பு வெளிப்படும்போது ஒருவரையொருவர் சுட்டிக்காட்டி விமர்சித்து இருவரும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றார்கள்.

நாட்டில் நடக்கும் விடயங்கள் குறித்து பொதுமக்கள் அதிருப்தியடையும் போது அது தனக்குத் தெரியாது என்றும் பத்திரிகைகள் மூலமாகவே தானும் அதுகுறித்து அறிந்து கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

உண்மையில் அவருக்கு நாட்டில் நடப்பது எதுவும் தெரியாது என்றால் அவர் நாட்டின் தலைவராக இருக்கத் தகுதியற்றவர். ஆனால் உண்மையில் அனைத்தையும் அறிந்து வைத்துக் கொணடு அவர் நாடகமாடிக் கொண்டிருபபதை பொதுமக்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நடந்து கொள்கின்றார்கள்.


இதன்மூலம் முன்னைய அரசாங்கத்தில் தாங்கள் மேற்கொண்ட மோசடிகளி லிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக பொதுமக்கள் மத்தியில் இந்த அரசாங்கம் குறித்து ஒரு அதிருப்தி அலை தோன்றியுள்ளது.

மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக பொதுமக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியைச் சம்பாதித்த ஒரே அரசாங்கம் இதுதான் என்றும் லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



மானிப்பாய் சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் ஊடாக பாடசாலை மாணவர்கள் உள்ள 4 குடும்பங்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. துவிச்சக்கர வண்டிகளை நோர்வே கணபதி துர்க்கை ஆலய விருபாட்ஷி நித்தியானந்தசர்மா அம்மையார் வழங்கினார்.



வடமாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் நூல் நிலையத்திற்கு 35 ஆயிரம் பெறுமதியான நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார். இதன் கையளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.திரிலிங்கநாதன் சனசமூக நிலைய தலைவர் கலாநிதி நா.தனேந்திரனிடம் நூல்களை கையளிப்பதை படத்தில் காணலாம்.

# வெப்பமான காலநிலை தொடருமானால் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு வரும்

## மேற்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர்

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை மேலும் தொடருமானால் குடிநீருக்குக்கூட பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் அது தேசியப் பிரச்சினையாக உருவெடுக்கும் என்று நகர மற்றும் மேற்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதிகமான வெப்பம் காரணமாக நெல்அறுவடை, மரக்கறி உற்பத்தி, பழப் பயிர்ச் செய்கை, தேயிலைப் பயிர்ச் செய்கை மற்றும் பூக்கள் உற்பத்தி என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காலநிலை மாற்றத்தை இலங்கையில் மட்டுமல்ல உலகம் பூராகவும் நகர நிர்மாணங்களைத் திட்டமிடுவோர் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சிற்குட்பட்ட ஊழியர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக பிரதான உணவுப் பயிர்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, தேங்காய் மற்றும் றப்பர் என்பனவற்றின் உற்பத்தி வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளன. மனிதகுலத்திற்கு அடுத்த மிகப்பெரிய சவால் என்னவெனில் கோள்களின் சுற்றுவட்டப் பாதையில் பூமியின் வடக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும் உருகிக்கொண்டிருப்பதாகவும் இதுபூமியை கடுமையான பாதிப்பிற்கு உள்ளாக்கும் எனவும் விளைவுகள் எதிர்வு கூறமுடியாதவைகளாக உள்ளன எனவும் அமெரிக்கவிண்வெளி ஆய்வுநிறுவனமான நாசா உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே உலக சமூகம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதுடன் காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.


இலங்கையர்களுக்கு இது அவ்வளவு கடினமான காரியமன்று. ஏனெனில் அவர்கள் சுற்றுச்சூழலை விரும்புகின்றவர்களாகவும் அதனைப் பாதுகாப்பவர்களாகவும் இருப்பதனால் ஆகும் என்று தெரிவித்துள்ளார். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 698

அச்சு




சிவகுமார்




அனு அனுஜன்




நிஷாந்தன்




பிரபு




சந்துரு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

# நன்மைகள் வந்து சேர ஜென்ம குருமாற வேண்டும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



*நன்மைகள் வந்துசேர ஜென்ம குரு மாற வேண்டும்!*

*நம்பியவர்களை கைவிடாத நல்ல உள்ளம் படைத்த சிம்ம இராசி நேயர்களே!*

மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. இப் புத்தாண்டு வருமானத்தைப் பெருக்கிக் கொடுக்குமா? அருமைக்குழந்தைகளுக்கு அழகிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்குமா? உத்தியோகத்தில் உயர பதவியும், உன்னத நிலையும் கிடைக்குமா? அரசியல் வாழ்க்கையில் அதிரடித் திருப பங்கள் ஏற்படுமா? பொது நலத்தில் புகழ்குவிக்க முடியுமா? எனறெலலாம் வருடம் பிறப்பதற்கு முன்பே உங்கள் மனம் அசைபோட்டுக் கொண்டிருக்கும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி 31 ஆம தகதி மாலை நேரத்திலேயே நிகழ்ந்திருக்கிறது. குறிப்பாக உங்கள ராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனுக்கு உரிய நாளில் பிறப்பதால் தனலாபம் சிறப்பாக வந்து சேரும். தனித்து இயங்கும் ஆற்றலும் உருவாகும். திருவாதிரை நட்சத்திரத்தில் ஆண்டு தொடங்குவதால் அதற்குரிய கிரகமான ராகு உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார்.

கொடுக்கும் ராகு குருவோடும் கூடியிருக்கின்றார். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். வழக்குகள் சாதகமாகும். மறைமுக எதிரிகளின் தொல்லை குறையும். பௌர்ணமி நாளில் நிலவை வழிபட்டு மலை வலம் வருவது நல்லது. ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தில் உங்கள் ராசி இருப்பதால் சர்ப்ப சாந்தி அவசியம் செய்து கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு ஜென்ம குருவால் நன்மை கிடைக்க வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக் கடவுளுக்கு முல்லைப்பூச் சூட்டி அர்ச்சனைகள் செய்து வருவது நல்லது.

பொதுவாக "ஜென்ம ராமர் வனத்திலே" என்பர். எனவே குரு ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது நீண்ட தூரத்திற்கு ஒரு சிலருக்கு இடமாறுதல்கள் கிடைத்துவிடும். மனநிம்மதி குறைவாகவே இருந்தாலும் மற்ற வழிகளில் நன்மைகள் உங்களுக்கு கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உதவிக் கரம் நீட்ட மறுத்தாலும் மாற்றினத்தவர்கள் உங்களுக்கு மதிப்பு கொடுத்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவர்.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு பொருளாதாரத்தில் வளர்ச்சி கூடும். புதிதாக நீங்கள் எடுத்த முடிவுகளில் வெற்றி கிடைக்கும். அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். ஆலயத் திருப்பணிக்கு கொடுத்து மகிழ் வீர்கள்.

அர்த்தாஷ்டமச் சனியும், அர்த்தாஷ்டமச் செவ்வாயும் அதிக பட்ச நாட்கள் நீடிததிருப்பதால் சாதாரண சிகிச்சையும், ரண சிகிச்சையும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கலாம. ராகு, கேது செவ்வாய், சனி ஆகிய நான்கு கிரகங்களும் உங்கள் சுய ஜாதகத்தில் இருக்கும் நிலையறிந்து சர்ப்ப தோஷ நிவர்த்தியும், சனிதோஷ நிவர்ததியும் அங்காரக தோஷ நிவர்த்தியும் செய்தால், ஆரோக்கியத் தொல்லைகள் அகலும்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி பதினேழு வரை!**

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அமைப்பின்படி பார்க்கும் பொழுது குருவும், ராகுவும் ஜென்மத்திலேயே சஞ்சரிக்கின்றார கள். விரயாதிபதி சந்திரன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே விரயத்திற் கேற்ற லாபம் வந்துகொண்டே இருக்கும். எதைச் செய்ய நினைத்தாலும் அதற்குரிய தொகையை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. காரியத்தை தொடங்கிவிட்டால் காசு பணம் தானே வந்து சேரும்.

குறிப்பாக குழந்தைகளின் கல்யாணப் பேச்சுக்களை நடத்த வேண்டுமானாலும், குடியிருக்க வீடு கட்ட வேண்டுமானாலும் அதற்கென்று ஒரு பெரும் தொகை கைவசம் இருக்க வேண்டும். ஆனால் இதற்கான முயற்சிகளை நீங்கள் செய்ய முன்வரும் பொழுது உடனிருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்பால் ஒவ்வொரு காரியமும் மளமள வென்று முடிந்து விடும்.

கும்ப கேதுவின் சஞ்சாரத்தால் வாழ்க கைத் துணை வழியே குழப்பங்கள் அதிகரிக்கும். கூடுதல் பணியின் காரணமாக வேலையை விட்டு விடும் சூழ்நிலைகூட ஒரு சிலருக்கு அமையலாம். தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன் வருவீர்கள். எதிரிகள் விலகுவர்.




உத்தியோகத்தில் உள்ளவர்கள் திடீர் மாற்றங்கள் கிடைத்து மகிழ்ச்சி காண்பர். வேலைப்பளு கூடுவதால் வேறு இடத்திற்குச் செல்லலாம் என்று நினைத்தாலும் அர்த் தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எங்கு சென்றாலும் இதே நிலைதான் ஏற் படும். பத்திரப் பதிவுகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உடலில் சிறு தொல் லைகள் ஏற்படும் பொழுதே மருத்துவ ஆலோ சனைகளைப் பெறுவது நல்லது.

**ஆடி பதினெட்டில் தேடிவரும் யோகம்!**

ஜென்ம குரு மாறினால்தான் உங்களுக்கு நன்மைகள் வந்து சேரும். வருடத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கும் குரு பகவான், மே 18 ஆம திகதிக்கு மேல் வளர்ச்சியின் உச்சத்திற்கு செல்ல வைக்கப் போகின்றது.

தூமுகி வருடம் ஆடிமாதம் 18-ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப் பெயர்ச்சியின் விளைவாக தனஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே ஓகஸ்ட் 2 க்கு மேல் அதிர்ஷ்டக் காற்று அலை மோதும். அந்த குருவினுடைய ஆதிக்கம் வாக்கு, தனம், குடும்பம் ஆகிய இடத்தில் பதிவதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயறபடுவீர்கள். பணப்பற்றாக்குறை அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குழந்தைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவீர்கள். கூட்டாளிகள் உங்களுக்கு நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

இரண்டிலே குருதான் நின்றால் இல்லத்தில் மகிழ்ச்சி கூடும், திரண்டதோர்செல்வம் சேரும், தித்திக்கும் தொழில்கள் வாய்க்கும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்களுக்கு பேரும், புகழும் பெருவாரியாக வரப்போகின்றது. ஊறுசெய்தவர் கள் விலகுவர். உள்ளத்தில் அமைதி கூடும். காரில் பவனி வரும் யோகம் கிட்டும். கட்டடம் கட்டிக் குடியேறும் வாய்ப்பும் கைகூடி வரும்.

குரு உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக இருப்பதால் இரண்டாமிடத்தில் சஞ்சரிககும் பொழுது திரண்ட செல்வம் தேடி வரும்.

என்றைக்கோ உறவினர்களுககுக் கொடுத்த தொகை இப்பொழுது வந்து சேரும். காலாவதியான கடன என்று நினைத்தது, கூட இப்பொழுது தானே தேடிவந்து சேரும். இல்லத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்க வாய்ப்பு உண்டு. நிரந்தர வேலை அமைய வில்லையே, நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு காரியம் கைகூடி மகிழ்ச்சியை வழங்கும்.

குருவின் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. அதன் விளைவாக நல்ல மாற்றங்கள் இல்லம் தேடிவரப போகின்றது.

"ஆறினைக் குரு தான் பார்த்தால் அடைந்திடும் கடன்கள" என்பர்.

பொதுவாக கடன் இல்லாத மனிதர்களே இப்பொழுது இல்லை என்று சொல்லலாம். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழிபிறக்க வேண்டுமானால் 6 ஆம் இடத தைக் குரு பார்க்க வேண்டும். எனவே, இது போன்ற காலங்களில் கொடுக்கல-வாங்கல் களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உத்தி யோக மாற்றங்கள் உறுதியாகும்.

வேலையிலிருந்து வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு சுயதொழில் செய்ய முன் வரு வர். பணி ஓய்வு பெற்றாலும் மீண்டும் பணி புரியும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உண்டு.

"எட்டினை குருதான் பார்த்தால் இருந்த நோய் மறைந்து போகும" என்பர். எனவே, உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் பிறக்கும். நோய் இருந்த இடம் தெரியாமல் மறையும். இழப்புகளை ஈடு செய்ய புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டு மகிழ்வீர்கள்.

"பத்தினை குருதான் பார்த்தால் பாரினில் தொழில் வாய்க்கும" என்பர். அந்த அடிப்படையில் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள் வீர்கள். அதற்கான மூலதனங்கள் வந்து சேரும். வங்கிகளும், வள்ளல்களும் போட்டிபோட்டுக்கொண்டு உதவுவர்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

தூமுகி வருடத்தில் சிம்ம ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். குரு பஞ்சம ஸ்தானத்தை பார்ப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். அனைத்துச் செயறபாடுகளையும் தொடங்குவதற்கு முன்பு ஆனைமுகப்பெருமானை வழிபடுவது நல்லது. ராகு-கேதுக்களின்



ஆதிக்கத்தால் ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டேஇருக்கும்.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் குறைகள் அகலும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில வெற்றி கிடைக்கும்.

தன்னம்பிக்கை மிக்க நீங்கள் இந்த ஆண்டு சாதனை நிகழ்த்தப் போகிறீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் யோகமும், பூமி வாங்கும் யோகமும் உண்டு. பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானமும் வந்து சேரும். ஜூன் மாத்திற்கு மேல் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உண்டு. வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள். ராகு-கேது பரிகாரம் செய்வதும் நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

பஞ்சம அஷ்டமாதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகும்.

பிரச்சினைகளிலிருந்து விடுபட வேணடுமானால் அவர்களை உங்கள் மேற் பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பூர்வீக சொத்துத் தகராறுகள் அதிகரிக்கும். பத்திரப் பதிவில் தாமதங்கள் ஏற்படலாம்.

சனியின் வக்ர காலத்தில் எதிரிகளின் தொல்லை கூடுதலாக இருக்கும். வழக்குகள் இழுபறி நிலையில் செல்லலாம். நட்பை பகையாக்கிக் கொள்ளாமல் பார்த்துக கொள்ளுங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணிமாற்றங்களை சந்திக்க வேண்டியிருக்கும். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் வந்தாலும் விட்டுக கொடுத்துச் செல்வது நல்லது. இக் காலத தில் அனுமன் வழிபாட்டை மேற்கொள் வதன் மூலம் அமைதியை வர வழைத்துக் கொள்ளலாம்.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

ஞாயிறு தோறும் விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டு வருவதோடு, பௌர்ணமியன்று கிரிவலம் வருவதும் நல்லது. நிலவு வழிபாடு நிம்மதியைச் சேர்க்கும்.

நாளை கன்னி...

## மகிந்த ஆட்சியில் நடந்தது போன்று

# வறியவர்களின் மீது வரிச்சுமை திணிக்கப்படாது- ரணில் உறுதி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தினைப் போன்று குறைந்த வருமானம் ஈட்டுவோர் மீது வரிச்சுமை திணிக்கப்படாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



அலரி மாளிகையில் நேற்று அமைச்சர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி சில துறைகளில் விதிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பெற்றுக்கொண்ட மிகக் கூடிய கடன்கள் காரணமாகவே இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளது.

எனினும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தைப் போன்று குறைந்த வருமானம் ஈட்டுவோரை வரிச் சுமையில் ஆழ்த்தும் திட்டமில்லை.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செல்வந்தர்கள் சிலருக்கு மட்டும் வரிச் சலுவை வழுங்கியது.

தேசிய அரசாங்கத்தின் வரிக் கொள்கை வறியவர்களை பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# விக்னேஸ்வரனால் டிலானுக்கு கவலை



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் ஊடாக நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறும் முயற்சிக்கு வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன் முட்டுக்கட்டையாக இருப்பார் என்று தோன்றுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு காலத்தில் பதுளை நீதிமன்றத்தில் பணியாற்றிவர். ஒரு சட்டத்தரணியாக நான் அவரிடம்தான் முதலில் எனது தொழிலை ஆரம்பித்தேன்.

தனது வாகனத்தை தானே செலுத்திவந்த நீதிபதியாக விக்னேஸ்வரன் அக்காலத்தில் இருந்தார். அவ்வாறான ஒருவர் வடக்கு மாகாண முதலமைச்சராக வநதமைமையயிட்டு நான மகிழ்ச்சியடைந்தேன்.

ஆனால் தற்போது அவர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

வட மாகாண சபையின் இந்த யோசனையானது எமது சவால்களுக்கு மத்தியில் தீர்வைக்காண்பதற்கான எமது முயற்சிக்கு பாரிய தடையாக அமைந்துள்ளது.

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் அடிப்படையில் இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற வடக்கு முதலமைச்சரின் திட்ட வரைபானது தற்போதைய நிலைமையில் அவசியமற்றதாக உள்ளது. இந்த வரைபு தெற்கில் உள்ள இனவாதிகளை போஷிப்பதாக அமைந்துள்ளது.

அதாவது நாங்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சித்து வருகின்றோம். ஆனால் அந்த முயற்சிகளை சீர்குலைக்கும் நோக்கிலேயே வடக்கு முதல்வரின் திட்ட வரைபு அமைந்துள்ளது.

இது தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம்.

இந்த அரசியல் தீர்வுத் திட்ட விவகாரமானது மிகவும் உணர்வுபூர்வமானதாகும். எனவே இதில் அவசரப் படக்கூடாது. அவசரப்பட்டு குழப்பிவிட்டால் எதிர்பார்ப்புக்களை கைவிடவேண்டியேற்படும்.

குறிப்பாக வடக்கு மாகாண சபையின் இந்த செயற்பாடானது தெற்கில் சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கும் இனவாதிகளை போஷிப்பதாக காணப்படுகின்றது. தெற்கு இனவாதிகளுக்கு தீனிபோடும் வகையிலேயே வடக்கு முதலமைச்சரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி எமது நேர்மையான அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளுக்கு தடையேற்படுத்துவதாக இவர்களின் செயற்பாடுகள் உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சமபந்தன் மற்றும் என்னைப் போன்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு உலை வைப்பதாகவே வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# புதிய பொலிஸ்மா அதிபர் பூஜிதவின் நியமனத்தை ஏற்கவேமுடியாது-பசில்

இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை ஏற்கமுடியாது என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தரவை நியமிக்க அணைமயில் அரசியல் அமைப்பு பேரவை அனுமதியை வழங்கியது.

எனினும் இந்த பேரவையில் பொலிஸ் விசாரணையை எதிர்நோக்கும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றோர் உள்ளனர். எனவே அவர்களால் ஒரு பொலிஸ்மா அதிபருக்கான ஒப்புதல் வழங்கப்படுவதை ஏற்கமுடியாது என்று பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)





கரவெட்டி வெல்லன்பிள்ளையார் ஆலய தேர் உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது...

# செய்தித்துளிகள்

## சிகிச்சை பலனின்றி வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடக்கு புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த கந்தன் முருகையா (வயது -72) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மேற்படி வயோதிபர் கடந்த மாதம் 25 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (இ-5-30)

## புதையல் தோண்டிய 4 பேர் கைது

திம்புலாகல, குடாவெவ தொல்பொருட்கள் உள்ள பாதுகாப்பான வனப் பிரதேசத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த நால்வர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக அரலகங்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்தேகம பிரதேசத்திலிருந்து சென்று பூஜை நடத்தி பின்னர் புதையல் தோண்டிக் கொண்டிருக்கும் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## 27,603 பேருக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு இம்முறை 27,603 மாணவ மாணவியருக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இம்முறை பல்கலைக்கழகங்களுக்காக 27,603 மாணவ மாணவியரை இணைத்துக் கொள்ளவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

15 பல்கலைக்கழகங்கள் மற்றும் 18 உயர் கல்வி நிறுவனங்களில் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டில் 25,200 மாணவ மாணவியருக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெற்றதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.(இ-5)

## விக்ரமசிங்க ஏமாற்றம்

பதில் பொலிஸ்மா அதிபர் பதவியில் செயற்பட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க. பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யவுள்ளதாக பொலிஸ் திணைக்கள தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் ஓய்வினை அடுத்து, அந்தப் பதவி அவருக்கும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தார்.

எனினும் புதிய பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தரவின் பெயர் அரசியலமைப்பு சபையினால் ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்யப்பட்டது.

இதனால் விரக்தியடைந்த பிரதி பொலிஸ்மா அதிபர் விக்ரமசிங்க தனது இராஜினாமா கடிதத்தை பொலிஸ் திணைக்களத்திடமும், அதன் பிரதியை பாதுகாப்பு செயலாளர், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது. (இ-5)


# தமிழ் சினிமா வரலாறு

144

## எம்.ஜி.ஆரை சுப்பர் ஸ்டாராக உயர்த்திய "மலைக்கள்ளன்"

...கருணாநிதி யோசித்தார். மலைக்கள்ளன் கதையை அவர் ஏற்கனவே படித்திருந்தார். நிச்சயம் அது வெற்றிப்படமாக அமையும் என்பது அவருக்குத் தெரிந்தது. எனவே வசனம் எழுத சம்ம தித்தார்.

கட்சிப்பிரசாரம் எதுவுமின்றி மலைக்கள்ளனுக்கு கருணாநிதி வசனம் எழுதினார். இந்தப்படத்தில் அவர் வசனத்தில் அனல் பறக்கவில்லை, தென்றல் வீசியது. கதைக்கும் கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வசனத்தை எளிய-இனிய நடையில் எழுதியிருந்தார்.



### மாறு வேடங்கள்

எம்ஜிஆரும் பானுமதியும் ஜோடியாக நடித்தனர். எம்.ஜி.ஆர். பல மாறு வேடங்களில் வந்து அசத்தினார். அவருடைய முழுத்திறமையும் இந்தப் படத்தில் பிரகாசித்தது.

மற்றும் எம்.ஜி.சக்ரபாணி, டி.எஸ்.துரைராஜ், ஈ.ஆர்.சகாதேவன், சந்தியா, சுரபிபால சரஸ்வதி ஆகியோரும் நடித்தனர். டி.எஸ். துரைராஜ், மாம்பழ நாயுடு என்ற பொலிஸாராக வந்து வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தார்.

பாடல்களை நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, கு.ம.பாலசுப்பிரமணியம், தஞ்சை ராமையாதாஸ், மக்களன்பன் ஆகியோர் எழுதியிருந்தனர். எஸ்.எம். சுப்பையா நாயுடு இசை அமைத்தார்.

பானுமதியைக் குதிரையில் அமரச் செய்து எம்.ஜி. ஆர். அழைத்துச் செல்லும் காட்சியில் இடம்பெற்ற எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்ற பாடலை கணீர் குரலில் டி.எம். சவுந்தரராஜன் பாட, அது சுப்பர் ஹிட்டாக அமைந்தது. எம்.ஜி. ஆருக்கு டி.எம். எஸ்.குரல் மிகவும் பொருந்தியிருந்ததால் தொடர்ந்து அவர் எம்.ஜி. ஆருக்கு பாடலானார்.

### 6 மொழிகளில்

மற்ற எந்தப் படத்துக்கும் கிடைக்காத தனிச்சிறப்பை மலைக்கள்ளன் பெற்றது. தமிழ் மட்டுமின்றி இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் இக்கதை தயாரிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். நடித்த வேடத்தில் இந்தியில் திலிப்குமார் நடித்தார்.

எல்லா மொழி கதாநாயகர்களும் எம்.ஜி. ஆரைப் பின்பற்றியே நடித்தனர்.

மலைக்கள்ளன் 6 மொழிகளிலும் மகத்தான வெற்றி பெற்றது.

மலைக்கள்ளனுக்குப் பிறகு எம்.ஜி. ஆரும் சிவாஜிகணேசனும் இணைந்து நடித்த கூண்டுக்கிளி வெளி வந்தது. டி.ஆர்.ரமண்ணா டைரக்சனில், ஆர். ஆர்.பிக்சர் சார் தயாரித்த படம் இது. விந்தன் வசனம் எழுதினார். (தொடரும்)

# இறுகப்போகும் இந்தியாவின் கடிவாளம்



(நேறறை கட்டுரையின் தொடர்ச்சி)

இலங்கை விமானப்படையின் எதிர்பார்ப்புக்கு அமைவாக போர் விமானங்களை விநியோகிப்பதற்கு சீனாவும் தயார் நிலையில் இருபபதாகவே தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் தான் சீன விமானப்படை அதிகாரிகளின் இலங்கைப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கபபட்டது. அதுவும் இந்தியாவின் கோவாவில் நடந்த 4 நாள் பாதுகாப்பு கண்காட்சிக்கு முன்னதாக இந்தக் குழு கொழும்பு வந்திருந்ததும் கவனிக்கத்தக்கது. 9 ஆவது தடவையாக இந்தியா நடத்திய அந்த பாதுகாப்புக் கணகாட்சியில் 32 நாடுகளின் 200க்கு மேற்பட்ட ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் பங்கெடுத திருந்தன. இந்த நிறுவனங்கள் தமது தயாரிப்புகளின் திறனையும் கண்காட்சியில் வெளிப்படுத்தியிருந்தன.

இந்தப் பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தலைமையிலான குழு கோவா சென்றிருந்தது. அந்தக் குழுவில் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

எனினும் போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் ககன் புளத் சிங்கள இந்தக் கண்காட்சிக்கு செல்லவில்லை. அது தமது போர் விமானங்களை கொள்வனவு செய்யுமாறு இந்தியா கொடுக்கும் அழுத்தங்களை தவிர்ப்பதற்கான உத்தியாக இருக்கலாம்.

ஆனாலும் தேஜஸ் போர் விமானங்களை உற்பத்தி செய்யும் ஹிந்துஸ்தான ஏரோ நொட்டிகல் நிறுவனத்தின் காட்சியரங்கில் அதன் அதிகாரிகள் தேஜஸ் போர் விமானங்களின் தரம் மற்றும் திறன் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலருக்கு விளக்கமளித்திருந்தனர். இதன்போது தேஜஸ் போர் விமானமொன்றின் மாதிரி நினைவுச் சின்னமும் ருவான விஜேவரத்தனவுக்கு வழங்கப்பட்டது.

இந்தியா தனது தயாரிப்பாக தேஜஸ் போர் விமானங்களை இலங்கை விமானப்படை கொளவனவு செய்ய வேண்டுமென்று தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறது. இப்போது இறுதியாக ஆயுத உற்பத்தியில் தன்னிறைவைப் பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

உலகின் முக்கியமான ஆயுத உற்பத்தி நிறுவனங்களை இந்தியாவில் முதலீடு செய்ய வைத்து உற்பத்தியை ஆரம்பிக்க இந்தியா நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஏற்கனவே பிரான்சின் ரபேல் போர் விமானங்களை இந்தியாவிலே தயாரிக்கும் உடன்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் எவ் 16 போர் விமானங்களை இந்தியாவில் தயாரிக்க மாட்டின் லுக் ஹீட் நிறுவனத்துடன் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவா பாதுகாப்புக் கண்காட்சியின் போது, அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இஸ்ரேலின் புகழ்பெற்ற ஆயுத தளபாட நிறுவனமான ரபேல், கூட்டு முயற்சியாக விமான எதிர்ப்பு ஏவுகணைகள், வான் பாதுகாப்பு கருவிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் உடன்பாடும் எட்டப்பட்டுள்ளது. பாதுகாப்புத் தளபாட ஏற்றுமதியில் இந்தியா பின்னிலையில் இருப்பதால், பெரும் வருமானம் ஈட்டும் வாய்ப்பையும் இழக்கிறது. அதைவிட, தனக்கு நெருக்கமான நாடுகளையும் இழக்க வேண்டியிருக்கிறது. இதனால், இந்தியாவின் தேவைக்காகவும், ஏற்றுமதி நோக்கிற்காகவும், வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து, ஆயுத தளபாட உற்பத்திகளை தீவிரப்படுத்த இந்தியா முடிவு செய்திருக்கிறது.

இது இலங்கைக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடியதொரு விடயம்தான். இதுவரை இலங்கைப் படைகளின் தேவைகளில் பெரும்பகுதியை சீனாவே நிறைவு செய்து வந்திருக்கிறது.

ஏனைய சந்தர்ப்பங்களில் சுயமாக செயற்பட்டு, ரஷ்யா, பிரித்தானியா, அமெரிக்கா, பிரேசில், பாகிஸ்தான் என்று பல்வேறு நாடுகளிடமும் ஆயுதங்களையும் போர்த் தளபாடங்களையும் இலங்கை வாங்கி வந்திருக்கிறது.

ஆனால், வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்தும், தனியாகவும், ஆயுத உற்பத்தியை இந்தியா தீவிரப்படுத்தியிருக்கின்ற சூழலில், இனி மேல் இலங்கை அரசாங்கத்துக்கு அத்தகைய வாய்ப்புகள் கடினமாகவே இருக்கும். அதாவது. எந்த போர்த் தளபாடத்தைக் கொள்வனவு செய்ய முயன்றாலும், அதில் இந்தியா தலையீடு செய்யலாம். தமது தயாரிப்புகளை வாங்குமாறு அழுத்தம் கொடுக்கலாம்.

பாகிஸ்தானிடம் ஜே.எவ்.-17 போர் விமானங்களை வாங்க முடியாத நிலை யில் இருப்பது இந்த நெருககடியின் முதற்கட்டமாக பார்க்கப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில், இந்தியாவைப் பகைத்துக்கொள்ள முடி யாது. அதன் பேச்சைத் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் இருப்பது, ஒருவகை யில் அதன் துரதிஷ்டம்தான். ஏனென் றால், இந்தியா நண்பனாகவே இருந்தா லும், இலஙகையின் நலன்களின் மீது அதற்கு அக்கறை இருந்தாலும், - தாயும் பிள்ளையுமாக இருந்தாலும், வாயும் வயிறும் வேறுதானே.

(முற்றும்)

-சுபத்ரா-

இலவுகாத்த கிளிபோல்
ஏமாந்துவிடாதே
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தீர்வு நோக்கி நகராவிட்டால் நல்லாட்சிக்குப் பேராபத்து

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி இன்னமும் நல்லாட்சி சிந்திப்பதாகத் தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தாம் ஏதும் ஆயத்தம் செய்தால், அதற்கு எதிராக தென்பகுதியில் கடுமையான பிரசாரம் நடக்கும் என்பதாக நல்லாட்சி கருதுகிறது.

உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காதவரை நல்லாட்சிக்கு ஆபத்து என்பதே உண்மை.

எனினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் விருப்பமின்மை காரணமாக நல்லாட்சியும் காலம் கடத்துகிறது.

இதற்காக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்று நாம் வெளிக்கிட்டால் அதற்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ தரப்பு கடும் பிரசாரம் செய்யும்.

இது தமது ஆட்சிக்கு ஆபத்தாகி விடும் என்று நல்லாட்சியினர் கூறி வருகின்றனர்.

இதற்கு ஆமாம் என்று தலையாட்டும் அளவிலேயே தமிழ் அரசியல் தலைமையும் உள்ளது.

தமிழ் அரசியல் தலைமையைப் பொறுத்தவரை எதிர்க்கட்சித் தலைமை கிடைத்தது பெரும்பேறு என்று கருதுகின்றது.

இத்துணை காலப் போராட்டம், தமிழ் மக்கள் சந்தித்த பேரிழப்பு என அனைத்துக்குமான கிடைப்பனவுதான் எதிர்க்கட்சி தலைவர் பதவி என்பதாக கருதப்படுவதால், நல்லாட்சியைப் பார்த்து எப்போதுதான் நீங்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள் என்று கேட்பதற்கு ஆளில்லாமல் போய் விட்டது.

இதன் காரணமாக தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கை தொடர்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடிப்பதற்காகவே நல்லாட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு எதிர்க்கட்சித்தலைவர் பதவியைக் கொடுத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஒரு தமிழனுக்கு கிடைத்ததால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அது பேருதவியாயிற்று என்று கூறுவதைத் தவிர தமிழ் மக்களுக்கு அதனால் எந்தவித நன்மையுமில்லை எனலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பை மிகக் கவனமாக கையாள வேண்டும் என்று அடிக்கடி கூறிக் கொள்ளும் நல்லாட்சியினர்,

மறுபுறத்தில் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வந்து போவதையும் தடைசெய்ய வேண்டும் என வியூகம் அமைத்து வருவதற்குள் அவர்கள் உள்நோக்கம் தெரியவருகிறது.

எது எப்படியாயினும் இனப்பிரச்சினைக்கான தீர்வை 2016ஆம் ஆண்டுக்குள் நல்லாட்சி எட்டத் தவறுமாயின் அதன் விளைவு வேறுவிதமாக அமைந்து நல்லாட்சிக்கு பேராபத்தாக அமையும் என்பதே உண்மை.

இது தவிர 2016ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படா விட்டால் 01.01.2017 இல் இரா.சம்பந்தர் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். இல்லையேல் சம்பந்தர் தமிழ்மக்களை ஏமாற்றி விட்டார் என்பதாக நிலைமை முடியும்.

ஆக, சம்பந்தர் எதிர்க்கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்தால் நிலைமை எப்படியாகும் என்பதை காலம் தக்கபடி கற்பிக்கும்.

# மிகப்பெரிய மே தினக் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தல்

## ஐ.தே.கவினருக்கு ரணில் விடுத்தார்

கொழும்பு மாவட்டத்தில் மிகப் பெரிய மே தினக் கூட் டத்தை ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் ரணில் வக்ரமசிங்க கட்சியின் அமைசசர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

புத்தாண்டுக்காக வாழ்த்து தெரிவிப்பதற்காக நேற்று முனதினம் அலரி மாளிகைக்குச் சென்றிருந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். கட்சியின் அனைவரும் ஒன்றிணைந்து இம்முறை மே தினக் கூட்டத்தை வெற்றிகரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மே தினத்துடன் அரசாங்கத்தின் பலத்தை நிரூபிக்க வேண்டும் எனவும் எதிர் காலத்திட்டங்கள் தொடர்பிலும் பிரதமர் விளக்கமளித்துள்ளார். "அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்களுக்கு புதிய நாடு" என்ற தொனிப் பொருளில் இம்முறை மே தினக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

மே தினக் கூட்டத்தை சிறந்த முறையில் நடத்த அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-5)

# துறைமுக ஊழியர்கள் மீண்டும் போராட்டத்திற்கு முஸ்தீபு

துறைமுக ஊழியர்களுக்கு வழங்குவதற்கு உடன்பட்ட சலுகைகள் துறைமுக நிர்வாக அதிகாரியினால் மீறப்பட்டு வருவதனால், இதுவரை கைவிடப்பட்டிருந்த தொழிற்சங்கப் போராட்டத்தை அடுத்து வரும் நாட்களில் மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக துறைமுக ஊழியர் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் துறைமுக தொழிற்சங்க பிரதிநிதிகளுக் கும் இடையில் கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற கலந்துரையாடலின் போது துறை முக ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு பிரதமர் உடன்பாடு கண்டவற்றை, நிர்வாக அதிகாரி மறுத்து வருகின்றார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிற்சங்க நடவடிக்கை மீண்டும் முன்னெடுக்கப் போவதாக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பிரசன்ன களுத்தரகே தெரிவித்துள்ளார்.

இந்தபோராட்டத்தின்ஆரம்பநடவடிக்கையாக பகல் போசன இடைவெளி நேரத்தில் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும், தமது போராட்டத்தை தட்டிக் கழித்தால் போராட்டம் வேறுவடிவம் எடுக்கும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ-5)

# சமூக சேவைகள் அமைச்சு தேவையற்றதாக மாறிவிட்டது

சமூக சேவைகள் திணைக்களத்தினை தேவையற்ற ஒரு அமைப்பாக் உருவாகுவதற்கு இடமளிப்பது மிகப் பெரிய சமூகப் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என சமூகசேவைகள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவரது அமைச்சில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து சமூகசேவைகள் திணைக்களம் செயற்றிறனற்றுக் காணப்டுகின்றது. இது தொடர்பாக அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளேன்.

சமூக சேவைகள் அமைச்சில் பணியாற்றுவதற்கு போதியளவு அலுவலர்கள் இல்லாமல் உள்ளது. ஆனாலும் 1.4 மில்லியன் சமுர்த்திப் பயனாளிகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு பெறும் 31 ஆயிரத்து 825 அங்கவீனர்களுக்கும் எமது அமைச்சு சேவையாற்றி வருகிறது.

அத்துடன் 2.5 மில்லியன் முதியோர்கள், 1.8 மில்லியன் மாற்றுத் திறனாளிகள் மற்றும் 6 இலட்சம் பல்வேறு மன நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு சேவையாற்றி வருகிறோம். இப்படிப்பட்டவர்களை சமூக சேவைகள் அமைச்சே கவனித்து வருகிறது.

சமூகசேவைகள் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேவையற்ற ஒன்றாக கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து மாறியிருப்பதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில மயிலங் காடு, குப்பிளான், மருதனார் மடம், சுன்னாகம் பெரியமதவடி, உடுவில், சங்குவேலி, மானிப்பாய், இணுவில், உப்புமடம், தாவடி, மானிப்பாய் வீதி, சுதுமலை, குளப்பிட்டி, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி, ஆனைக்கோட்டைச்சந்தி, யாழ். வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூழாவடி, ஆணைக்கோட்டை VC, நவாலி மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, பள்ளத்தடி, சாவற்காட்டு சந்தி, வராகி அம்மன் கோவிலடி, காக்கைதீவு, மருதனார் மடம் - யாழ்.நுண் கலைப்பீடம், பிராந்திய விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் அலுவலகம், சுன்னாகம் கார்கில்ஸ் பி.எல்.சி ஆகிய இடங் களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் இரணைமடு, திருவையாறு, கிருஸ்ணபுரம், அம்பாள் குளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயக புரம், விவேகானந்தநகர், கோவிந்தன் கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணை மடு, திருவையாறு, இரணை மடு விமா னப்படை I மற்றும் II, வடடக்கச்சி பாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றட் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)




## அனைவருக்கும் தொண்டனாக இரு

❖ சர்வேஸ்வரனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். ஆனால், மூடர்களோ ஞானத்தையும் போதனையையும் வெறுத்து ஒதுக்குவார்கள்.

❖ கடவுள் தாம் நேசிக்கிறவனைத் தண்டிக்கிறார். தம் மகனாக ஏற்றுக்கொள்ளும் எவனையும் பிரம்பால் அடிக்கிறார்.

❖ கீல் முனையில் கதவு ஆடுகிறது. சோம்பேறி படுக்கையில் ஆடிக் கொண்டிருக்கிறான்.

❖ ஒவ்வொரு மனிதனும் தன் மோகங்களால் இழுக்கப்பட்டு மருளும்போதே சோதனைகளுக்கு ஆளாகிறான்.

❖ சோம்பேறியே! எறும்பைக் கவனி. அதன் வழிமுறைகளைப் பின்பற்றி அறிவு பெறு. அதற்கு வழிகாட்டி இல்லை. தலைவனும் இல்லை. அதிகாரியும் இல்லை. கோடைகால ஆகாரத்திற்கு அறுவடை காலத்திலே தானியத்தைச் சேகரித்து வைக்கிறது.

❖ ஆசைச் சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான். ஏனெனில் சோதனை முடிந்த பின் வாழ்க்கையின் கிரீடத்தைப் பெறுவான்.

❖ எவனாவது முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லோருக்கும் கடைசியானவனாய், எவருக்கும் தொண்டனாய் இருப்பானாக.



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சேவை

மற்றவர்களுடைய இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக்கொள்வது, தனி மனித உணர்விலிருந்து பிரபஞ்ச உணர்விற்கு விரிவடைவதற்கான வழியாகும். காலத்துடன் நீங்கள் வளரும்போது உங்களது மெய்யறிவும் வளரவேண்டும். நீங்கள் காலத்தோடு ஞானத்தில் விரிவடையும்போது மனச்சோர்வு ஏற்படும் வாய்ப்பே இல்லை. ஆனந்தம் உங்கள் உள் ஆழத்தின் பிறப்பிடம் (மூலம்)

சொந்தத் துன்பங்களிலிருந்து சுதந்திரம் பெறவேண்டுமானால் இப்பிரபஞ்சத்தின் துன்பங்களை நீங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டும்! சொந்த மகிழ்ச்சிகளை விரிவுபடுத்த வேண்டுமானால் இப்பிரபஞ்சத்தின் மகிழ்ச்சிகளையும் நீங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டும். என் நிலையென்ன? நான் இந்த உலகத்திலிருந்து என்ன இலாபம் பெறமுடியும் என்று எண்ணுவதற்குப் பதிலாக இந்த உலகத்திற்கு நான் என்ன செய்ய முடியும்? என்று எண்ணுங்கள். ஒவ்வொருவரும் சமுதாயத்திற்கு உதவவேண்டும் என்ற கருத்துடன் வரும்போது உங்கள் சமுதாயம் தெய்வீகச் சமுதாயமாகும். காலத்தோடு ஞானத்தில் விரிவடைய என் நிலை என்ன? என்பதிலிருந்து நான் என்ன கொடுக்கக்கூடும் என்று நமக்கு நாமே கற்பித்துக் கொள்ளவேண்டும். தனிஒருவருடைய மனநிலையைப் பண்படுத்தவேண்டும்.

தியானம் செய்யும் போது உங்களுக்கு நல்ல அனுபவங்கள் கிடைக்கவில்லை என்றால் மேலும் அதிகமாகச் சேவை செய்யுங்கள். அதனால் நீங்கள் தகுதியைப் பெறுவீர்கள். உங்கள் தியானம் இன்னும் ஆழமாகச் செல்லும். உங்கள் சேவையின் மூலம் யாருக்காவது சிறிதளவு துன்பம் நீங்கினாலோ அதாவது சிரமத்திலிருந்து விடுதலை கிடைத்தாலோ நல்ல உணர்வலைகள், ஆசிகள் உங்களுக்கு வரும்.

சேவை தகுதியைக் கொண்டு வருகிறது.

தகுதி, தியானத்தில் நீங்கள் ஆழமாகச் செல்ல உதவுகிறது

தியானம் உங்கள் புன்னகையை திரும்பக் கொண்டு வருகிறது.

போனவாரப் புதிருக்கு விடை: விலை மதிக்க முடியாத ஒன்று உன்னுடைய புன்னகை, உன்னுடைய மகிழ்ச்சி. இதை நீ உலகில் இழக்கிறாய். நீ சத்சங்கத்தில் இருக்கும்போது அது உன்னுடன் இருப்பதை உணர்கிறாய். அதை சத்சங்கத்தில் உன்னால் உணரமுடியவில்லையென்றால், வேறெங்கும் உன்னால் உணர முடியாது. அதை மறந்துவிடு.

# மகிழன் சிறப்பாட்டம் காலிறுதியில் ஸ்ரீமுருகன்



புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் அண்மையில் நடத்திய கிரிக்கெட்போட்டியில் மல்லாகம் ஸ்ரீ முருகன் அணியை எதிர்த்து கல்வியங்காடு GPS மோதியது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற GPS முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் 10 ஓவர்களில் 7விக்கெட் இழப்பிற்கு 96 ஓட்டங்களை பெற்றது. மகிழன் 26பந்துகளில் 50ஓட்டங்களை பெற்றார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய GPS 10ஓவர்களில் 8விக்கெட் இழப்பிற்கு 75 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. 21 ஓட்டங்களால் மல்லாகம் ஸ்ரீமுருகன் வெற்றி பெற்று காலிறுதிக்கு தெரிவாகியது. (கு)

# மல்லாவி மனிதநேய இளைஞர் மன்ற கிரிக்கெட்

## ஸ்கைலாப் அணி சம்பியன்



மல்லாவி மனிதநேய இளைஞர் மன்றம் நடத்திய அணிக்கு ஆறுபேர் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் பதின்மூன்று அணிகள் கலந்து கொண்டன. இறுதிப்போட்டியில் பாண்டியன்குளம் ஹன்போய்ஸ் அணியும் பாலிநகர் ஸ்கைலாப் அணியும் மோதிக் கொண்டன.

இதில் பாலையடி ஸ்கைலாப் அணி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. (கு)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மேற்படி கிரிக்கெட் போட்டிக்கு யாழ். மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் அணிகள் மாத்திரமே பங்கு கொள்ள முடியும்.

அணிக்கு 9 பேர் 7 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மேற்படி போட்டி அனைத்தும் அச்சுவேலி மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறும்.

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவுறுத்தியுள்ளனர். தொடர்புகளுக்கு 077 559 1459 077 893 4111. (கு)

# கொரியா செல்லவுள்ள இலங்கை உதைபந்து அணியில் புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் மூவர் தெரிவு

Asian School Football Championship போட்டிக்காக அடுத்த மாதம் கொரியா செல்லவுள்ள இலங்கை (U-19) உதைபந்தாட்ட அணியில் புனித ஹென்றியரசர் வீரர்களான நே.அன்ரனி றமேஷ், செ.யூட் சுபன் மற்றும் அ.மதுசன் ஆகிய மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் சுபன்,மதுசன் ஆகியோர் கடந்த ஆண்டு சீனா சென்ற இலங்கை அணியிலும் இடம்பெற்றிருந்ததுடன் AFC,U-19(Asian Football Confederation) தகுதிகாண் போட்டிகளிலும் (Bangladesh) பங்குபற்றியிருந்தனர்.

மேலும் இவ்வருடம் தேசிய ரீதியில் நடைபெற்ற பல போட்டிகளில் திறமையினை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து நே.அன்ரனி றமேஷ் தேசிய அணியிலும் இடம்பிடித்துள்ளார். (கு)







# கிரிக்கெட் சுற்றுத்தொடர்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுத்தொடருக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 11 பேர் 10 பேர் ஓவர்கள் கொண்டதாக மேற்படி போட்டி நடைபெறும்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்க விளையாட்டுக்கழகங்கள் 077 224 7668, 077 078 9368 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் 2 ஆம் இடத்தினை பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங் கப்படும். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இராகவன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம்

மூளாய் விக்டோரி வி.க.இராகவன் ஞாபகார்த்தமாக பி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்ட போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் மின்னொளியில் நடைபெற்றது.

இதில் முதலாவது போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணி புத்தூர் வளர்மதியை 3:2 என்ற செற் கணக்கில் வென்று இறுதிக்குள் நுழைந் தது.

2வது போட்டியில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி நாயன்மார் கட்டு பாரதி அணியை 3:1 என வெற்றி கொண்டு இறுதிக்குள் நுழைந்தது.

மற்றும் இன்று 22.04.2016 ஆம் திகதி ஏ பிரிவு போட்டிகள் ஆரம்பமாகும். (கு)

# பயிற்சியின் போது உயிரிழந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஒருவர் ப்யிற்சியின் போது திடீரென்று கீழே விழுந்து இறந்து போனது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்க முன்னாள் வீரர் பின்கோ நகம் கேப்டவுனில் கிரிக்கெட் அகடமியை நடத்தி வருகிறார்.

அங்கு பயிற்சி மற்றும் உடற்தகுதி தேர்வுகள் நடத்தப்பட்டன. அப்போது இடைவேளையில் லுகான்யா டஸ்கி (வயது22) என்ற வீரர் திடீரென மயங்கி கீழே விழுந்தார். அவரை உடனடியாக அருகில் இருந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்றும் அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அவருக்கு இதய கோளாறு இருந்ததாக கூறப்படுகிறது.

கிரிக்கெட் அகடமியை நடத்தி வந்த பின்கோ நகம் கூறுகையில், டஸ்கி நலமாகவே இருந்தார். அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

அவர் உடற்தகுதி தேர்வின் ஒரு பகுதியை முடித்து விட்டு தனது சட்டையை கழற்றி சக வீரர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது திடீரென இருமக் கொண்டே கீழே விழுந்து விட்டார். நாங்கள் உடனடியாக அவரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றோம், இருப்பினும் தாமதம் ஆகிவிட்டது என்று கூறியுள்ளார்.

டஸ்கி குடும்பத்தினருக்கு தனது அனுதாபங்களை தெரிவித்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியத்தின் தலைமை நிர்வாகி ஹாரூன் லோர்கட், இது அதிர்ச்சி தரும் செய்தி எனவும் குறிப்பிட்டுள்ளார். (க)

# இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவை சுடர் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

# டிராவிட்டின் மகன் சதம்




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டிராவிட்டின் மகன் சமித் பெங்களூரில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் சதம் விளாசியுள்ளார். பெங்களூரில் பள்ளிகள் மற்றும்கிளப்அணிகள்மோதும்டைகர் கிண்ண தொடர் நடைபெற்றது.

இதில் பெங்களூர் யுனைடெட் அணியின் சார்பாக விளையாடி சமித், 22 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசியுள்ளார்.(125 ஓட்டங்கள்) சகவீரர் பிரட்யூஸ் கைகொடுக்க, இவர்கள் இருவரும் சேர்ந்து 213 ஓட்டங்கள் எடுத்தனர்.

பெங்களூர் அணி 30 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 326 ஓட்டங்கள் எடுத்தது, பின் களமிறங்கிய பிராங்க் அணி 27 ஓவரில் 8 விக்கெட்டுக்கு ஆட்டமிழந்தனர். (கு)

# ராஜீவ் கொலைக்கைதிகள் குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை

## மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளை விடுவிப்பதற்காக தமிழக அரசு முன்வைத்த கோரிக்கையை மத்திய உள்துறை அமைச்சகம் நிராகரித்ததாக வெளியான செய்திக்கு மத்திய உள்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும் கூறியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, கடந்த 1991-ம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார்.

அந்த வழக்கில், முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக்கு மரண தண்டனை விதிக்கபபட்டது. பின்னர், உச்சநீதிமன்றம் அதை ஆயுள் தண்டனையாக மாற்றியது.

அதையடுத்து, அவர்களையும், ஏற்கெனவே இவ்வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் மேலும் 4 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்தது.

அதை எதிர்த்து, மத்திய அரசு உச்ச நீதிமன்றில் மனுதாக்கல் செய்தது. அம்மனுவை விசாரித்த அரசியல் சட்ட அமர்வு, ராஜீவ் கொலைக்கைதிகளை விடுதலை செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பு அளித்தது.

இதற்கிடையே, கடந்த மாதம் 2ஆம் திகதி, தமிழக அரசின் தலைமை செயலாளர் ஞானதேசிகன், மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அதில், ராஜீவ் கொலைக்கைதிகளின் வேண்டுகோளை ஏற்று அவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்திருப்பதாகவும், அதுபற்றிய மத்திய அரசின் கருத்தை தெரிவிக்க வேண்டும் என்றும் ஞானதேசிகன் கூறி இருந்தார்.

ஆனால், ராஜீவ் கொலைக் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என்று தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து விட்டதாக ஆங்கில பத்திரிகை ஒன்றில் நேற்று முன்தினம் செய்தி வெளியானது.

அதற்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்தின் செயலாளர் பொறுப்பில் உள்ள உயரதிகாரி ஒருவர் டில்லியில் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது,

செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்தது போல, ராஜீவ் கொலைக்கைதிகள் விடுதலை தொடர்பாக மத்திய அரசு இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை. மத்திய சட்ட அமைச்சகத்துடன் இது தொடர்பாக ஆலோசனை அளவில்தான் விவகாரம் உள்ளது.

மத்திய சட்ட அமைச்சகம் தங்களது ஆலோசனையை வழங்கிய பிறகு உள்துறை அமைச்சகம் இதுபற்றிய முடிவை எடுக்கும்.

தற்போது ராஜீவ் கொலைக் கைதிகள் விடுதலை குறித்த வழக்கு உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.

விரைவில் விசாரணையும் நடைபெற உள்ளது. தற்போது தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் இதுகுறித்த முடிவை அறிவிப்பதில் மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, நீதிமன்றில் முடிவை தெரிவிக்க மத்திய அரசு மேலும் அவகாசம் கோரும். இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

## பிரித்தானிய அரசு தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கையில் மனித உரிமை விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய அரசாங்கத்தின் வருடாந்த மனித உரிமை மற்றும் ஜனநாயக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், மனித உரிமைகள் விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டுள்ளது

இதில், இனங்களுக்கு இடையிலான இணக்கம் மற்றும் ஊடக சுதந்திரம் என்பன உள்ளடங்குகின்றன.

2015ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நல்லிணக்க விடயங்களை ஏற்றுக்கொண்டதன் மூலம் இலங்கை அரசாங்கம் தமது நல்லிணக்கத்தை வெளிக்காட்டியுள்ளது.

எனினும் சில விடயங்களில் இலங்கை இன்னும் முன்னேற்றத்தை காணவேண்டியுள்ளது.

இந்தநிலையில் இலங்கை தொடர்ந்தும் மனித உரிமை விடயங்களில் முன்னேற்றத்தை காட்டும் என்று தமது நாடு நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (செ-12)

# வீதியோர நாய்களை கட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

வளர்ப்பு நாய்களை பதிவு செய்யும் கட்டளைச் சட்டம் மற்றும் நீர் வெறுப்புநோய் தொடர்பான கட்டளைச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இது தொடர்பில் அமைச்சரவைக்கு முன்வைத்த பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் கஜந்த கருணாதிலக குறிப்பிட்டார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே இத்தகவலை அமைச்சர் கஜந்த கருணாதிலக வெளியிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் விபரிக்கையில்,

இந்த சட்டத்தில் காலத்திற்கேற்றால்போல் திருத்தம் செய்து குறித்த இரண்டு சட்டங்களையும் இணைத்து ஒரு தனிச் சட்டம் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைவாகவே இக் கட்டளைச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வீதியோர நாய்கள் மூலம் பொது மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள், நோய்கள் மற்றும் சுகாதார அச்சுறுத்தல்கள் தொடர்பில் அமைச்சரவையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பான தகவல்களை சுகாதார அமைச்சு, கிராமிய பொருளாதார அமைச்சு யோசனைகளை முன்வைக்க வேண்டுமென்றும் அறிவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (செ-12)

# மரண அறிவித்தல்

## திருமதி தயாவதி நவகுமாரன்



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் உசன் மற்றும் 17/45, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தயாவதி நவகுமாரன் (21.04.2016) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இந்து போர்ட் (Hindu Board) இராஜரத்னத்தின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் (முன்னாள் அதிபர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யோகாம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் உசனைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் உமா மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் நவகுமாரனின் (ஓய்வுநிலை வங்கி உத்தியோகத்தர் - Commercial Bank, Jaffna.) அன்பு மனைவியும் மாதங்கி (யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 3ஆம் வருட மாணவி), கிருத்திகன் (Sampath Bank Kaytes), தாரங்கி (GCE A/L 2016 Batch மாணவி - யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தனுரங்கி (தரம் 10 மாணவி யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதாவின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணமூர்த்தி, சறோஜினி, சாந்தினி, சிவகுமார், ரவிகுமார், றஜனி, நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (24.04.2016) பி.ப ஒரு மணியளவில் சரசாலை தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
சரஸ்வதி வித்தியாலயம் அருகில்
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:-
ந.நவகுமாரன்
(Rtd Banker, Commercial Bank, Jaffna.)

(4264)

# போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை

## ஐ.நா. மாநாட்டில் அமைச்சர் சாகல உரை

(கொழும்பு)



போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாமல் செய்வதற்கு இந்து சமுத்திர வலய நாடுகளுடன் கூட்டு நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதற்கு ஏற்றால் போன்று புதிய வேலைத்திட்டங்கள் இலங்கையினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் 2020 ஆம் ஆண்டளவில் போதைப் பொருள் வர்த்தகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே எமது இலக்காகும் என சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

போதைபொருள் முற்றாக ஒழிப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-12)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பங்குச் சந்தையின் யாழ். கிளையின் ஏற்பாட்டில் முதலீடு தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்றுமாலை 3.00 மணிக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளைக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார். (செ)

# இலங்கை...

ஆண்டில் இலங்கைக்கு மஞ்சள் அட்டை எனப்படுகின்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2015-ம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இலங்கை தற்போது அதன் சட்ட ஏற்பாடுகளை திருத்திக் கொண்டுள்ளதுடன் மீன்பிடி படகுகளை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வதில் முன்னேற்றத்தை காண்பித்தலில் ஐரோப்பிய ஒன்றியம் திருப்தியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# பொலிஸ் அதிகாரி...

ஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரியாக இருந்த சுமித் பெரேரா என்ற பொலிஸ் அதிகாரியே கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த பொலிஸ் அதிகாரி, தாஜுடீன் கொலை தொடர்பான விசாரணையின் உண்மையான தகவல்களை மூடிமறைத்து விசாரணைகளை முடக்கியதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

விசாரணைகள் முடியாத காரணத்தினால் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர்.

அந்த வேண்டுகோளுக்கு ஆட்சேபனை தெரிவித்த சந்தேகநபரின் வழக்கறிஞர் ஆஷா கஹவத்த, தாஜுடீனை கொலை செய்யுமாறு உத்தரவிட்ட நபர்கள் சுதந்திரமாக வெளியே உள்ளதாகவும், குறித்த கொலையுடன் தொடர்பு இல்லாத நபரை பொலிஸார் கைது செய்துள்ளமையை கண்டிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த வழக்கை முன்னெடுத்து செல்வதாக மக்களுக்கு காண்பிப்பதற்காகவே பொலிஸார் இந்த சந்தேகநபரை கைது செய்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த நீதிபதி, சந்தேகநபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (செ-12)

# தமிழரின்...

தரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமாதானத்தை விரும்புபவராக தன்னைக் காட்டிக் கொள்கின்ற ஜனாதிபதி மைதத்திரிபால சிறிசேன, புரையோடிப் போயுள்ள 80 வருட காலவரலாற்றைக் கொண்ட தமிழர்களுடைய பிரச்சினைக்கு ஒருதீர்வைக் காணவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கான தீர்வை முழுமையாக காணும் பட்சத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழர்கள் என்றும்பின் தொடர்வார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து சிறிதரன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர், நல்லாட்சி அரசாங்கம் சில விடயங்களில் முன்னேற்றங்களைச் செய்துள்ளது.

குறிப்பாக வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியேற்றத்துக்காக சில பகுதிகள் விடுவிக்கப்பட்டதுடன், பரவிப்பாஞ்சானில் 40 குடும்பங்களின் இடங்கள் விடுவிக்கப்பட்டன.

இன்னும் 300 குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப்படவுள்ளது. அதேநேரத்தில் புதிய அரசியல்யாப்பைக் கொண்டு வருவதற்காக தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாங்கள் முக்கியத்துவம் கொடுப்பதாக அரசாங்கம் கூறியிருக்கின்றது.

நாங்கள் வெறுமனே ஜனநாயகத்துக்கு விரோதமானவர்கள் அல்ல. கோஷங்களுடன் இருக்கவில்லை. தமிழர்களுக்கு உரித்தான ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த அரசாங்கத்துக்கு எந்தெந்த வகையில் நாங்கள் ஆதரவை வழங்க முடியுமோ அவற்றை வழங்கி வருகின்றோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லெண்ணங்கள் சிலவற்றை அவருடைய பேச்சில் பார்க்கின்றோம். சில வேளைகளில் சிங்கள இனவாதிகளை திருப்திப்படுத்தும் வகையில் பேசுகின்றாரா? என்ற சந்தேகமும் எழுகின்றது.

இருந்தாலும் ஒருமாற்றங்களை நோக்கி நகர்கின்றபோது, முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-281)

# வடக்கு-தெற்கு...

6.30 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

2 ஆம் நாள் நிகழ்வாக நாளை சனிக்கிழமை வடக்கு தெற்கு மாணவர்களின் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தும் வகையில் நடைபவனி ஒன்று காலை 8 மணிக்கு யாழ்.பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி பழைய பூங்காவை வந்தடைந்து அங்கு புதுவருட நிகழ்வுகள் விசேடமாக இடம்பெற்று பின்னர் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும் என வட மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது. (செ-9)

# புலிகளின் பாடல்...

இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இளைஞன் நேற்று மாலை யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி பணித்துள்ளார். (செ-4,12)

# தமிழ் விவசாயி...

திருகோணமலை - மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட படுகாடு விவசாயிகளை இலக்கத்தகடு இல்லாத உழவு இயந்திரம் ஒன்றில் சென்ற சிங்களவர்கள் கழுத்தில் கத்தி வைத்து அச்சுறுத்தியதாக முறையிடப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளின் பின்னர் சிங்கள விவசாயிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது விவசாய நிலங்களிற்கு கடந்த திங்கட்கிழமை சென்றிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் அகத்தியர் சிவன் கோவில் ஸ்தாபனத்திற்கு சொந்தமான 20 ஏக்கர் காணி மற்றும் தமிழ் மக்களின் 300 ஏக்கர் காணிகளை தொடர்ந்தும் தெகிவத்தை விகாராதிபதி குழுவினர் தமது கட்டுப்பாட்டுள் வைத்திருக்க எடுத்த முயற்சியினால் அப்பகுதியில் கடுமையான பதற்றம் நிலவியது.

இதேவேளை அச்சமடைந்த தமிழ் விவசாயிகள் தமது காணிகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை காணிக்குள் செல்லவேண்டாம் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறிப்பிட்டனர்.

எனினும் அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து எதிர்வரும் 25ஆம்திகதி திங்கட்கிழமை தமது பாரம்பரிய காணிக்குள் மீண்டும் செல்லவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் மக்களின் பாரம்பரியமாக விளங்கிய படுகாடு பிரதேசத்தில் உள்ள விவசாய காணிகளில் சிங்கள விவசாயிகள் படையினரின் ஒத்துழைப்புடன் அத்துமீறி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

தமது காணிகள் என அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்களை அரச அதிகாரிகள் உறுதிப்படுத்திய நிலையில், கடந்த திங்கட்கிழமை தமது நிலங்களில் விவசாய நடவடிக்கையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசியல்வாதிகள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

அதேவேளை கிழக்கு பிராந்திய பொலிஸ் மா அதிபர் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இந்நிலையில் போரின் காரணமாக விவசாயம் செய்யமுடியாமல் போன தமது காணிகளின் உரிமையினை சிங்கள விவசாயிகள் தடுத்து வருவதாக தெரிவித்து அங்கு திரண்ட தமிழ் விவசாயிகள் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர். (செ-12,9)

# மகிந்தவின்...

பெயர்கள் சூட்டப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது தந்தையால் ஆரம்பிக்கப்பட்ட கம் உதாவ வீடமைப்புத் திட்டமே இவ்வாறு மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த சஜித்,

அரச ஊழியர்களுக்காக முதல் தடவையாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கடன் வழங்க முன்வந்துள்ளமையையும் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-12)

# சுன்னாகத்தில்...

வம் ஒன்று பதிவாகியுள்ளமை அனைவரிடத்தேயும் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

மேற்படி கோவில் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் தனிமையில் கதைத்து கொண்டு இருக்கும் போது அப்பகுதிக்கு வந்த இளைஞர் குழு சரமாரியாக வாள்வெட்டினை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இளைஞர் குறித்த இடத்தில் சுமார் பத்து நிமிடங்கள் வரை மயங்கிய நிலையில் வீழ்ந்து காணப்பட்டுள்ளார்.

கவனிப்பாரற்ற நிலையில் வீழ்ந்து கிடந்த குறித்த இளைஞரை முச்சக்கர வண்டி ஓட்டுநர் ஒருவர் கண்டு அயலவர்களின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவந்து அனுமதித்துள்ளார். குறித்த இளைஞரை வெட்டிய கும்பல் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும்,

இதன்போது குறித்த இளைஞர் அவர்களை கண்டவுடன் தப்பியோட முயன்றதாகவும் எனினும் அந்த குழு இளைஞன் மீது கலைத்து கலைத்து வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இதில் குறித்த இளைஞர் கையில் படுகாயமடைந்துள்ளார்.

மயங்கிய நிலையில் வீழ்ந்து கிடந்த பிரஸ்தாப இளைஞனை மீட்டிருக்காவிடின் இரத்தப் போக்கு அதிகரித்து உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஒன்பது மாணவர்கள் கைது செய்யப்பட்டு அது தொடர்பான விசாரணைகள் முடிவடைட்வதற்குள் மீண்டும் ஒரு வாள் வெட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# உணவுப்...

ளர்கள் சங்கத்தின் தேசிய ஏற்பாட்டாளார் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சிற்றுண்டிகளின் பெறுமதிசேர் வரி அதிகரிப்பு தொடர்பில் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மொத்த மற்றும் சில்லறை பொருட்களுக்கான பெறுமதிசேர் வரி அதிகரிப்புக்கு அமைய சிற்றுண்டிகளின் விலைகளும் அதிகரிக்கப்படும் என அசேல சம்பத் கூறியுள்ளார்.

குறிப்பாக 5, 10 மற்றும் 15 ரூபாவால் சிற்றுண்டிகளின் விலை அதிகரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் கட்டாயம் இந்த விலை அதிகரிப்பு அமுல்படுத்தப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிசாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஏற்பாட்டாளர் அசேல சம்பத் அறிவித்துள்ளார். (செ-12)

# தனி நபர் கடனை அதிகரித்தவர் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு நாட்டை பொறுபேற்கும் போது ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக இருந்த தனிநபர் கடனானது 2015 ஆம் ஆண்டு அவர் ஆட்சியை விட்டுச் செல்லும் போது 4 லட்சத்து 52 ஆயிரம் ரூபாயாக அதிகரித்திருந்தாக அமைச்சர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சகல மக்களின் கடன் சுமை யை அதிகரித்து விட்டே மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை விட்டுச் சென்றார். அதே போல் மகிந்த ராஜபக்ஷ நாட்டின் ஆட்சி பொறுப்பை ஏற்ற போது நாட்டின் மொத்த கடன் 21 லட்சத்து 39 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாயாக இருந்தது.

மகிந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சியை விட்டு செல்லும் போது நாட்டின் மொத்த கடன் 73 லட்சத்து 90 ஆயிரத்து 899 மில்லியன் ரூபா. இதனையே மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு மிகுதியாக வைத்து விட்டுச் சென்றார்.

நாடு தற்போது கடன் பொறியில் சிக்கியிருப்பதற்கு முன்னாள் ஜனாதிபதியின் அரசாங்கமே காரணம் என அவர் தெரிவித்தார். (செ-12)

# யாழில் நேற்று வாள்வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கே.கே.எஸ் வீதி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த சத்தியானந்தன் கஜேந்திரன் (வயது 31) என்ற இளைஞரே படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் குறித்த பகுதியில் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இருவர் மேற்படி இளைஞன் மீது திடீர் வாள் வெட்டினை நிகழ்த்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


## பதவி வெற்றிடம்

- **கணனி பக்க வடிமைப்பாளர்கள்**
  (அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் ஆண்கள், இரவுக் கடமை)
- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (பயிலுநர்கள் ஆண்கள், பகல் இரவுக் கடமை)
- **இயந்திர இயக்குநர்கள்**
  (பயிலுநர் ஆண்கள், இரவுக் கடமை)
- **தொடர்பாடல் (பெண்)**
  (சிங்களம் பேசத் தெரிந்தவர், பகல் கடமை)

குறிப்பு:- யாழ்.நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன்
**24.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு**
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

- பொது முகாமையாளர்



FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
(C-4390)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1079 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 23.04.16 சனி 08 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 25.04.16 Mon@ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.